Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 · திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 04 வெள்ளிக்கிழமை (19.06.2015) பக்கங்கள் 20 ஓசை – 262

## யாழில் திடீர் சோதனை 7 பேர் கஞ்சாவுடன் கைது

யாழ். வந்துள்ள விசேட மதுவரித் திணைக்கள பரிசோதகர்கள் குழு மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 7 பேர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரி உதவி ஆணையாளர் கிறிஸ்ரி யோசப்பின் பணிப்பில் வவுனியா மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் தலைமையிலான குழுவினர் விசேடமாக கஞ்சா பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் கஞ்சாவை கையாளுவோரை கைதுசெய்ய சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

பிரவுண் வீதி, கொட்டடி, கொழும்புத்துறை, கொய்யாத் தோட்டம், நாவாந்துறை போன்ற பகுதிகளில் இவ்வாறு 7 பேர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினமும் நேற்றும் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக வவுனியா மதுவரி திணைக்கள அதிகாரி பி.ரகுநாதன் தெரிவித்துள்ளார். (இ,25)

## வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய வேண்டும்



### சிறிய கட்சிகள் அரசிடம் வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தல் முறைமை மாற்றம் அடங்கிய 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை உள்ளடக்கி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை

19 ஆம் பக்கம் பார்க்க

## "மாவா" விற்ற இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மாணவர்களுக்கு "மாவா" எனும் போதைப் பொருள் கலந்த பாக்கினை விற்பனை செய்த 2 பேர் நேற்று யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட போதைப் பாக்கை கொக்குவில் பகுதியிலுள்ள ஒரு பாடசாலையின் 4 மாணவர்கள் பாவித்தமையால் அம்மாணவர்கள் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளால் கைது

19 ஆம் பக்கம் பார்க்க

## சூடு பிடிக்கும் பண விவகாரம்

# மாவைக்கு விக்கியின் பதில்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெற்கில் பணம் பெற்றுக் கொண்டார்கள் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியதாக வெளிவந்த செய்தி தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா விளக்கம் கேட்டு முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்துக்கு, முதலமைச்சர் நேற்று பதில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இணையத்தளங்களில் வெளிவந்த செய்திகளுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கில்லை. ஆனால் ஜனாதிபதியிடம் தெரிவித்த முறைப்பாடு குறித்துப் பதிலளிப்பதற்கு கடமைப்பட்டுள்ளதால் இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

எமது மக்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளும் விடயங்களையே நம்பிக்கையானவையாகத் தென்பட்டால் நாம் மக்கள் நலம் கருதி வெளியிடுகின்றோம். அவற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் பிழையேதும் செய்யவில்லை என்று அவர்கள் நினைத்தால் அதைப் பகிரங்கமாகக் கூறலாம்.

உதாரணத்துக்கு கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்துக்களை இங்கு சுட்டிக்காட்டலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரியில் உள்ள 6 கிணறுகளை புனரமைப்பதற்காகவும் வேறு தொடர்புடைய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் 5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டையும், வலிகாமம் கிழக்கில் 8 வீதிகளைப் புனரமைப்பதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டையும் கேட்டிருந்தோம். அந்நிதி ஒதுக்கீடுகள் மீள்குடியேற்ற அமைச்சினூடாக ஒதுக்கீடு செய்யப்

19 ஆம் பக்கம் பார்க்க

## 30 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் மீதான தாக்குதல் மற்றும் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 30 பேரை நேற்று யாழ். நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

வித்தியா கொலை செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட குழப்ப நிலைமையின் போது பொலிஸாரின்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பொலிஸ் ரோந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பாடசாலைகளுக்கு அண்மையில் நடைபெறும் போதைப்பொருள் வியாபாரம், குற்றச்செயல்கள், பாடசாலை மாணவிகளுடன் சேட்டை செய்தல், போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நேற்று தொடக்கம் இத்தகைய செயல்களை கண்காணிக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முன்றிலில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் இந்த சைக்கிள் ரோந்தில் ஈடுபடும் பொலிஸார் காலை மற்றும் மதிய வேளைகளில் பாடசாலைப் பகுதிகளை

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு எம்.பி.க்களில் நிதியுதவி பெற்றவர்கள் யார்?

### எதிர்க் கட்சித் தலைவர் தவராசா முதலமைச்சரிடம் கேள்வி



(யாழ்ப்பாணம்)

தெற்கிற்கு அழைக்கப்பட்டு பாரிய நிதியுதவி பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் யாரென்பதனை சபைக்கு தெரியப்படுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் எதிர்க்கட்சித்தலைவர் கேள்வியொன்றை எழுப்பியுள்ளார்.

அக்கேள்வியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண சபையைப் புறக்கணித்து விட்டு வடக்கின் அபிவிருத்திக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை தனியாக தெற்கிற்கு அழைத்து பாரிய நிதியுதவி வழங்கப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதென வட மாகாண முதலமைச்சர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளதாக அண்மையில் ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது.

அச்செய்தியில் கூறப்பட்ட வாறு முதலமைச்சரால் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டதா எனவும், அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டதாயின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் யாரை தெற்கிற்குத் தனியாக அழைத்து அவ்வாறு நிதி வழங்கப்பட்டது? வழங்கப்பட்ட நிதி எவ்வளவு? யாரினால் அந்நிதி வழங்கப்பட்டது என்ற விபரங்களை 23.06.2015 சபை அமர்வின் போது சபைக்குத் தெரியப்படுத்தும் வண்ணம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேட்டுள்ளார்.

## மோட்டார் சைக்கிள் விபத்து; ஒருவர் மரணம், இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் இசைக்கச்சேரி பார்த்துவிட்டு திரும்பிய மூன்று இளைஞர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஸ்தலத்திலேயே மரணமானார்.

அச்சுவேலியிலிருந்து தொண்டைமானாறு நோக்கி நேற்று முன்தினம் அதிகாலை மோட்டார் சைக்கிளில் பயணித்த இந்த மூன்று இளைஞர்களும் சைக்கிளின் முன் சக்கரம் காற்றுப் போன நிலையில் கெருடாவில் 3 ஆவது சந்தியில் மரத்துடன் மோதுண்டு விபத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் தொண்டைமானாறு கெருடாவில் பகுதியைச் சேர்ந்த செந்திவேல் சிவாகரன் (வயது - 18) ஸ்தலத்திலேயே

19 ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்கு தரமான சேவையை வழங்கும் வலி. மேற்கு பிரதேச சபை

## வேள்ட் விசன் நிறுவனம் புகழாரம்

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைமையகம் பொது மக்களுக்கான தரமான சேவையை வினைத்திறனுடன் செயலாற்றுகின்றது.

வடக்கில் முன்னுதாரண சபையாக வலி. மேற்கு பிரதேச சபையை எமது வேள்ட் விசன் நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது.

இவ்வாறு வேள்ட் விசன் நிறுவன ரிவோஸ் IIIஇன் முகாமையாளர் எவ். அலெக்ஸ் றொச் தெரிவித்துள்ளார்.

வலி. மேற்கு பிரதேச சபையும் - வேள்ட் விசன் நிறுவனமும் இணைந்த வகையில் கடந்த காலத்தில் முன்னெடுத்த அபிவிருத்தி செயல்முறையை மதிப்பீடு செய்வதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபை தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட முகாமையாளர் எவ். அலெக்ஸ் றொச் மேலும் தெரிவிக்கையில், வலி. மேற்கு பிரதேச சபையானது பொதுமக்களுக்கான குடிதண்ணீர் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை எமது வேள்ட் விசன் நிறுவனத் துடன் இணைந்த வகையில் பயனுள்ள வகையில் முன்னெடுத்திருந்தது.

எதிர்காலத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். இதற்காக பிரதேச சபை எம்மோடு ஒத்துழைக்கும் என்றார்.

இதில் தலைமை தாங்கிய சபைத் தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தெரிவிக்கையில், வலி. மேற்கு பிரதேச சபையின் அபிவிருத்திக்கும் பொது பயன்பாட்டு சேவைகளுக்கும் வேள்ட் விசன் நிறுவனம் எமக்கு உதவுவது மிகப் பெறுமதி வாய்ந்த ஒன்றாகும்.

அடுத்த நான்கு ஆண்டு வரை செயற்படவுள்ள வேள்ட் விசன் நிறுவன செயற்பாட்டுக்கு பூரண பங்களிப்போம்.

மேலும் எமது சபைக்குட்பட்ட தேவைகளை நாம் கருத்திட்டங்களாகவும் முன்மொழிவு பத்திரங்களாகவும் முன்வைத்து வருகின்றோம். என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட உறுப்பினர் த. நடனேந்திரன் கூறுகையில், எமது சபைக்குட்பட்ட வகையில் தினம் கழிவு பொறிமுறை செயற்றிட்டத்திற்காக நாம் காணிகளை வரையறுத்து முன்மொழிவுகள் முன்வைத்துள்ளோம். எதிர்காலத்தில் வேள்ட் விசன் நிறுவனம் நிதிப்பங்களிப்பை வழங்கி உதவ முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ உறுப்பினர்களான க. சபாநாயகம், ரி. சசிதரன், செயலாளர் திருமதி உ. சாரதா, உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (92)

# சட்ட விரோத மது விற்பனை 40 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றினால் சட்ட விரோத மது விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

வவுனியா மதுவரிப் பரிசோதகர் குழுவினரால் சட்ட விரோதமான முறையில் மதுவை விற்பனை செய்தபோது கொழும்புத்துறைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நபருக்கே யாழ். நீதிமன்றம் தண்டம் விதித்தது.

நேற்று இந்த வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இத்தண்டம் விதிக்கப்பட்டதாக வவுனியா மது வரித் திணைக்கள அதிகாரி பி. ரகுநாதன் தெரிவித்தார். (இ, 25)

## இசை விருந்து

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி ஆலயத்தின் இறுதித் திருவிழா நாளான நேற்று முன்தினம் இசைக் கச்சேரி இடம்பெற்றதுடன் பக்த அடியார்கள் பலர் இதில் கலந்து கொண்டு பார்த்து மகிழ்ந்தனர்.

இதன்போது தெய்வீக கானங்கள் பல இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (85)

# செயல் திறன் அரங்க இயக்கத்தின் தேடல் நாடக பகிர்வுக் களம்

(யாழ்ப்பாணம்)

செயல் திறன் அரங்க இயக்கத்தின் தேடல் நாடக அரங்கியலுக்கான பகிர்வுக்களம் முதலாவது நிகழ்வு நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தே. தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உணர்ச்சி - காட்சி - இசை எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த. றொபேட் உரையாற்றவுள்ளார்.

இதில் நாடக படைப்பாக்கத்தில் இசையின் பங்கு, நாடகத்தில் இசையை எவ்வாறு பயன்படுத்துவது, ஆற்றுகைக் கலைக்கும் இசைக்குமான தொடர்பு என்பன பற்றி விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நாடக அரங்கியல் துறை சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கு பற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 130 பயனாளிகளுக்கு உதவிக் கொடுப்பனவுகள்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 130 பேருக்கு 3000 ரூபா உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் இந்த உதவிகளைப் பொதுப் பயனாளிகள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இப்பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வருடத்தில் 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட இந்த உதவிக் கொடுப்பனவுகள் கடந்த ஜனவரியில் இருந்து பயனாளிகள் எண்ணிக்கை 27 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது.

இந்த மாதம் முதல் மேலும் 57 பயனாளிகளுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (18)

# சுன்னாகத்தில் திருட்டு

(சுன்னாகம்)

சுன்னாகம் அந்தோனியார் கோவிலுக்கு அலுகிலுள்ள வீடொன்றிலிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவத்தின்போது திருடர்கள் வீட்டின் கூரையைப் பிரித்துக் கொண்டு உள்நுழைந்துள்ளனர்.

வீட்டிலிருந்து வெளியே வந்த வீட்டின் உரிமையாளரைத் தள்ளி விழுத்தி விட்டு தாலிக்கொடி உட்பட பல இலட்சம் பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாட்டினைப் பதிவு செய்ததோடு சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கரையோரப் பாதுகாப்பு வீதி இராணுவத்தினால் புனரமைப்பு

(பருத்தித்துறை)

கரையோரப் பாதுகாப்புக்கான ரோந்து வீதியை செப்பனிட்டு சிரமதான பணிகள் வடமராட்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இருந்து பிடாவ பகுதி வரை செல்லும் கரையோரப் பாதுகாப்பு வீதியே இவ்வாறு செப்பனிடப்பட்டுள்ளது.

வடமராட்சி பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதியின் தலைமையில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இராணுவத்தினரும் இணைந்து இந்த சிரதமானப் பணிகளை மேற்கொண்டனர்.

கரையோரப் பாதுகாப்புக்கான இந்த ரோந்து செல்லும் வீதியை புனரமைக்கும் பணிகள் கடந்த வருடத்தில் நடைபெற்றது. பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

# சித்தாமணிப்பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம்

கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தா மணிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் மறுநாள் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. உற்சவ காலங்களில் ஆன்மிக செற்பொழிவுகள் நடாத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. சிவலிங்கராசா, செந்தமிழ் சொல்லருவி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் லலீசன் ஆகியோர் சமயச் சொற்பொழிவுகளை நடாத்தவுள்ளதாக அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

## புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2013/2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2013/2014 இல் கலைமாணிப்பட்டக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் (Oriention Programme) 29-06-2015ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு மாணவர்கள் கைலாசபதி கலையரங்கத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விடுதி வசதி தேவைப்படும் வெளிமாவட்ட மாணவர்கள் 28-06-2015ஆம் திகதி முதல் விடுதிக்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

மாணவர்கள் நிகழ்ச்சி நிரலை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலோ www.jfn.ac.lk/arts எனும் இணையத்தளத்திலோ பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
11-06-2015 (C/3872)


# ஸ்ரீ இராம கிருஷ்ணரின் ஆன்ம சங்கம நிகழ்வு

(நல்லூர்)

ஸ்ரீ இராம கிருஷ்ணரின் ஆன்ம சங்கம நிகழ்வு நாளை 20ஆம் திகதி நல்லூர் வடக்கு அருளம்பலம் வீதியில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான கருவி சமூக வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கருவி அமைப்பின் தலைவர் க. சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் சுவாமி ரிதமயானந்தஜி மகராஜ் கலந்துகொள்ளவுள்ளார்.

"சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார்" எனும் தலைப்பில் இராம கிருஷ்ண மிஷன் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கி. சிவமோகனின் ஆன்மிக உரையும் இடம்பெறவுள்ளது. இறுதி நிகழ்வாக கருவி அமைப்பினரின் என்ன செய்வோம் நாடகமும் இடம்பெறவுள்ளது. தீபாரதனையுடன் நிகழ்வுகள் நிறைவு பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏலம்

பிரதேச அபிவிருத்தி வங்கியில அடவு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

30-04-2014இல் அடவு வைத்த தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 10-07-2015இல் மீட்கப்படாவிட்டால் 11-07-2015இல் பகிரங்க ஏலத்தில் வவுனியா கிளையில் விற்கப்படும்.

சுன்னாகம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கனகராயன்குளம், மன்னார், வவுனியா ஆகிய கிளைகளின் மீட்கப்படாத நகைகள் அடுத்த மாதம் 11,12ஆம் திகதிகளில் வவுனியா கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# யாருக்கும் வெட்கமில்லை

— ம. அய்யம்பிள்ளை



## கத்தியோடு களத்தில் சிங்கன்

'வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கத்தியோட களமிறங்கியிருக்கிறார். அரசியல் பழிவாங்கல்கள், கழுத்தறுப்புகளை நடாத்துவதற்காக ஆள் கச்சையை இறுக்கிக் கட்டியிருக்கிறார்' என்று இரண்டு நாளைக்கு முன்னர் எழுதியிருந்தேன் அல்லவா.

இந்தத் தகவல்களைப் படித்த வாசகர்கள் சிலர் மேலும் சில தகவல்களை அள்ளி வழங்கியிருக்கிறார்கள்.

இதோ கிடைக்கப்பெற்ற தகவல்கள் –

1. இந்தக் கல்வி அமைச்சர், தன்னுடைய வேலையைப் பெற்றதே ஒரு அரசியல் செல்வாக்கின் அடிப்படையில்தான். அதாவது செல்லையா குமாரசூரியர் தபால் தந்தி அமைச்சராக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த காலத்தில், அவரைப் பிடித்து, அவருடைய தயவில் ஒரு ஆசிரியப் பணியைப் பெற்றார். 'இண்டியன் கிறாஜூவேற்'றுகளுக்கு அப்பொழுது பட்டதாரி நியமனங்கள் வழங்கப்படுவதில்லை. தென்னிந்திய தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியின் பட்டதாரியான இவர், அப்போதிருந்த சட்டங்களுக்கு அப்பால் விளையாடி, அரசியற் செல்வாக்கின் மூலமாகவே தனக்கான நியமனத்தைப் பெற்றுக் கொண்டார். இதற்கு இவருடைய தந்தையார் தம்பிராசா போதகர் தன்னுடைய செல்வாக்கையும் மகனுக்காகப் பயன்படுத்தியிருந்தார்.

2. ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர், பின்னர், அதிபராகி, கோட்டக்கல்வி அதிகாரியாகி, பின்னர் வலயக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றினார். இது ஒரு வளர்ச்சிதான். ஆனால், இந்தக் காலகட்டத்தில் இவர் ஆசிரியர்களோடும் சக உத்தியோகத்தர்களோடும் பழகும் விதம் பலருடைய முகங்களை இன்னும் சுழிக்க வைத்துக் கொண்டிருக்கிறது. மற்றவர்களை அவமதிப்பது, பகடி பண்ணுவது, தன்னுடைய ஆங்கிலப் புலமையை வைத்துக் கொண்டு, மற்றவர்களை மட்டந்தட்ட முனைவது (இவர் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக இருந்தவர் உட்பட), தனக்கு விருப்ப மில்லாதவர்களைப் புறக்கணிப்பது அல்லது பாராமுகமாக இருப்பது என ஒரு விதமான மனிதராகவே இருந்தார்.

3. யுத்தம் நடந்து கொண்டிருந்த வன்னியில் இவர் இருந்தாலும் யுத்த வாடை இவரையோ இவருடைய குடும்பத்தினரையோ பாதித்ததில்லை. என்னதான் பொருளாதாரத்தடைகள், மின்சாரமின்மை போன்ற தலையாய பிரச்சினைகள் இருந்தாலும் இவர்களின் வீட்டை அதெல்லாம் அண்டியதில்லை. வழமையைப்போல ஈஸிச்சேரில் காலுக்கு மேல் கால்போட்டுக்கொண்டு,

மின்வெளிச் சத்தில் ஆங்கிலப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த் ஒரே குடும்பம் இவருடையதே.

4. யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்து கொண்டிருந்த போது சனங்கள் எல்லாம் மாத்தளனுக்கும் முள்ளிவாய்க்காலுக் குமாகப் போய்க்கொண் டிருக்கும்போது இவர் படை யினரை நோக்கிப் போனார். இது நடந்தது, விசுவமடுவில். 2009 பெப்ரவரியில்.

5. ஆசிரியத் தொழிலையே முறைப்படி செய்யாமல் இருந்த மகனை ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியாக்கினார். பின்னர், அவரை நிரந்தர ஆசிரியர்போல அடையாள அட்டையைப் பெறவைத்தார். அதைப் பயன்படுத்தி, வவுனியாவுக்கு அழைத்துச் சென்றார். அதன் பின்பு கொழும்பில் இருந்து வந்த பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் மூலமாக கொழும்பு கொண்டு சென்று. லண்டனுக்கு அனுப்பி வைத்தார். இது நடந்தது, வன்னியில் யுத்தம் உக்கிரமாக நடந்த வேளை.

இப்படி இன்னும் பல உண்டு....

இப்பொழுது கடும் தேசியவாதியாக நடமாடிக் கொண்டிருக்கும் எங்கள் கல்வி அமைச்சரின் தேசியப் பற்றின் விசித்திரம் இப்படித்தானிருக்கு....

# ஆசிரியர் பற்றாக்குறையால் உயர்தர மாணவர்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் சில பாடவிதானங்களை போதிப்பதற்கான ஆசிரியர்கள் இன்மையால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்.

இக்கல்லூரியில் நாடகமும் அரங்கவியலும், வரலாறு ஆகிய பாடங்களுக்கு உரிய ஆசிரியர்கள் இல்லையென தெரிவிக்கப்படுகிறது. இப்பாட நெறிகளுக்கென கடந்த வருடத்தில் நியமிக்கப்பட்டிருந்த ஆசிரியர்கள் இக்கல்லூரியிலிருந்து வன்னி பாடசாலைகளுக்கு மாற்றலாகி சென்றதை அடுத்தே குறித்த பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறையை மாணவர்கள் எதிர்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த ஆசிரியர்கள் மாற்றலாகிச் சென்று பல மாதங்களாகியும் அவர்களது இடத்திற்கு உரிய ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படாமையால் இப்பாட நெறிகளுக்காக வெளியே தனியார் கல்வி நிலையங்களையே மாணவர்கள் நம் பியிருக்க வேண்டியுள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் சந்திரகுமார் தெரிவித்தார்.

மாணவர்களின் நிலையை கவனத்தில் கொண்டு உரிய ஆசிரியர்களின் நியமனத்தை அதிபர் ஊடாக வலயக் கல்வி அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (120)

# வாகனங்களின் வேகத்தைக் கணிக்கும் ராடர் கருவி யாழ்.பொலிஸாரிடம்


(யாழ்ப்பாணம்)

வாகனங்களின் வேகத்தைக் கணிக்கும் "ராடர்" கருவி பொலிஸ் திணைக்களத்தால் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழப்பாணத்தில் வேகமாக வாகனங்களை செலுத்துவதால் இடம்பெறும் விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ராடர் கருவி இலங்கையில் பல வருடங்களுக்கு முன்னரே அறிமுகமான போதிலும் யாழ்.மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமையே இது அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல விபத்துக்களுக்கு சாரதிகளின் கட்டுப்பாடற்ற வேகமும் காரணமாக இருந்தது. வேகத்தைக் கணிக்கும் ராடர் இல்லாததால் நகரப் பகுதியிலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட வேகத்தில் வாகனங்களை செலுத்த அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலும் கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்கு எதிராக போக்குவரத்துப் பொலிஸாரால் நடவடிக்கைகள் எதனையும் எடுக்க முடியாத நிலை காணப்பட்டது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொடக்கம் வேகத்தைக் கணிக்கும் ராடர்களுடன் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பொலிஸார் தமது கடமையைத் தொடர்ந்தனர்.

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரத்தின் வருடாந்த கொடியேற்றத்திருவிழா



முல்லைத்தீவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தான்தோன்றீச்சரத்தில் ஒன்றான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கொடி ஏற்றத்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் கொடி ஏற்றத்திருவிழா சுப வேளையில் ஆலய பிரதம குருக்கள் கீர்த்தி ஸ்ரீ வாசன் குருக்களினால் இடம் பெற்று, எம் பெருமான் உள் வீதி வெளி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அன்னதான நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. இந்த ஆலயத்தில் 16 நாள் திருவிழா நடைபெறும் விசேட திருவிழாக்களாக 13 ஆம் திருவிழா வேட்டைத் திருவிழாவும், 14 ஆம் திருவிழா சப்பறத்திருவிழாவாகவும், 15 ஆம் திருவிழா தேர்த்திருவிழாவாகவும், 16 ஆம் திருவிழா தீர்த்த உற்சவமும், பூங்காவனமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# சுகாதார அதிகாரி திடீர்சோதனை காலாவதியான பொருட்கள் கைப்பற்றல்

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது வர்த்தகர்கள் பலர் கையும்மெய்யுமாக சிக்கினர்.

இவ்விசேட தேடுதலின்போது திகதி காலாவதியான பொருட்கள் உட்பட சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மானிப்பாய் மத்திய சந்தை உட்பட மானிப்பாய் பட்டினத்திலுள்ள 14 வர்த்தக நிலையங்களைச் சோதனை செய்தபோது 9 வர்த்தக நிலையங்களில் திகதி காலாவதியான பொருட்கள் உட்பட பாதுகாப்பான முறையில் வைக்கப்படாமலிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

# கரவெட்டி பிரதேச செயலக ஊழியர் இனந்தெரியாதோரால் தாக்குதல்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பணியாளர் ஒருவர், நேற்றுமுன்தினம் மதியம் கோவில் சந்திப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த அருளானந்தம் உதயகுமார் (வயது 30) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகினார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவரை, நெல்லியடி - கொடிகாமம் வீதி கோவில் சந்திப் பகுதியில் மறித்த 3 பேர் கொண்ட கும்பல், ஹெல்மட்டுக்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்கப்பட்டமையால் அவர் மயக்கமடைய தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

அயலவர்களின் உதவியுடன் குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

சுயசிந்தனை மரபைத் தூண்டாத கல்வி பெரும் ஆபத்தானதாகும். - அன்புவழியூர்க்கவிராயர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பார்வையும் அறிதலும்

பாடப்புத்தகங்களும் படிப்பும் சடங்காக மாறிவிட்ட அல்லது மாற்றிக்கொண்டுவிட்ட சூழலில் வாழ்கிறோம். படிப்பு என்பது ஒரு தொழிலுக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்கிற முறையில் நம் கல்வி முறை உருவானதால் ஏற்பட்டுள்ள சீர்கேடு இது.

'ஏதோ வேறு வழியில்லாமல் படித்துத் தொலைக்க வேண்டி இருக்கிறது' என்ற எண்ணத்துடன்தான் கலைப் பாடங்களாக இருந்தாலும் விஞ்ஞானப் பாடங்களாக இருந்தாலும் கற்பவர்கள் உண்டு. கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களும் மாணவர்களின் மனநிலையையும் பரீட்சைகளுக்காக மட்டுமே தாங்கள் கற்பிப்பதையும் உணர்ந்து அவற்றை மீறமாட்டார்கள்.

கல்வி என்பது வேலை கிடைப்பதற்கான ஒரு சடங்காக கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி வெறும் வாழ்க்கை வசதிக்கான கடவுச்சீட்டல்ல, பிரபஞ்ச அதிசயங்களை உணர்ந்து கொள்ள அதன் மர்மங்களில் பிரயாணிக்க ஒரு துடுப்பு என்பதனை மாணவர்களை உணரச் செய்யவேண்டும்.

அதற்கு கல்வி இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டினையே மாற்றியமைக்க வேண்டும்.

சி.பி.ஸ்னோ என்ற விஞ்ஞானி, அறிவியலுக்கும் சமுதாய அறிவுப்புலங்களுக்கும் இடையில் விரிந்து கொண்டு போகும் அபாயகரமான பிளவினைப் பற்றிக் கூறியுள்ளார்.

அந்த அபாயகரமான பிளவு நம் சமுதாயத்தை வெறும் சுயநலச் சமூகமாக மாற்றியிருப்பது மட்டுமல்லாமல் புதிய சிந்தனைகளை நாடவோ தேடவோ விரும்பாதவர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

பாடசாலைக்கு வெளியே விரிந்து கிடக்கும் வாழ்வு பற்றி எதுவும் உணர்த்தும் திறனில்லாக் கல்வியைக் கரைத்துக் குடித்துவிட்டு வெளியேறும் நம் இளைஞர்கள், நமக்கு வெளியேயுள்ள சமூகங்கள் பற்றியோ உலகங்கள் பற்றியோ பார்வையின்றி ஒற்றைப் போக்குச் சிந்தனைகளுடன் சுருங்கிவிடுகிறார்கள்.

இயற்கை வளங்களையும் அதனுடன் தன் வாழ்வு பின்னிப்பிணைந்து கிடக்கும் முறைகளையும் உணராமல் பாடசாலைகள், பல்கலைகளிலிருந்து வெளிவந்து பட்டங்களை மட்டும் பெறுபவர்களாகிறார்கள்.

இவர்களில் பலருக்கு அறிவியல் என்பதெல்லாம் முழுக்க முழுக்க மேற்கத்திய நாகரிகம்சார் விஷயம். ஆடைகள், அழகு சாதனங்கள் போல தங்களை மற்றவர்களிடமிருந்து உயர்த்திக் காட்டவும் பீற்றிக் கொள்ளவுமான ஓர் அடையாளம் மட்டுமே.

எனவே அறிவியல் மனப்பான்மையோ சமூக மனப்பான்மையோ வளராமல் ஆவேசம் – வெறுப்பு – வன்முறை மனப்பான்மைகளையே வளர்த்தவர்களாக உள்ளார்கள்.

இப்படித்தான் 'படித்தவர்களை'யும் 'அறிவாளிகளை'யும் கொண்ட நம் சமூகம் அழிவைத் தடுக்கவோ, அழிவிலிருந்து மீளும் வழிகளைக் காணவோ, அடுத்த சமூகங்களுக்கு இணையாக நகரவோ முடியாமல் அல்லாடுகிறது.

அறிவுடையோர் என்று சொல்லிக் கொள்ள முடிவதன் பொருள், அவர்கள் புதிய காலத்திற்கும் புதிய மாற்றங்களுக்கும் ஏற்ப மனித நடத்தைகள் ஒழுங்குகளைச் சூழலுடன் பொருத்தித் தெரிந்து கொள்கிறார்கள் என்பதே. அறிவியலின் அடிப்படையாக இருப்பது தேடல்.

தேடலை ஊக்குவிப்பதான கல்வியே நமக்கு முக்கியம். "நம்முடைய் முன்னோர்களுக்கு அணுவைப் பற்றிய அறிவு இருந்தது" என்பது போல போலியான பெருமிதங்களிலும், நமது சிந்தனைக்கப்பால் சரி எதுவுமில்லை என்ற கர்வ உணர்வுகளிலும் தேங்கிவிடுவது நம் பார்வையைக் குருடாக்கிவிடும்.

விஞ்ஞானக் கற்கை என்பதும் நாம் சமூகத்தை, உலகத்தை, இன்றைய உலக யதார்த்தத்தைப் புரிந்தவர்களாக விரிவடைவதற்கே உதவ வேண்டும். அறிவியல் என்பது தொழில்நுட்பம் சார்ந்ததில்லை, பார்வையும் அறிதலும் சார்ந்தது. - *ஆசிரியர்*

# தனியான பிரதேச செயலகம் வேண்டும்
## பூநகரி தெற்கு மக்கள் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி தெற்கு வலயத்திற்கு தனியான பிரதேச செயலக ஒன்று அவசியமென்பதை இவ் வலயத்தின் கீழ் வரும் பொது அமைப்பினர்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எந்த ஒரு சிறிய தேவைக்காயினும் சுமார் 25 கிலோமீற்றருக்கு அதிகமான தூரத்தை கடந்து இங்குவாழும் மக்கள் பூநகரி பிரதேச செயலகத்திற்கு வர வேண்டியுள்ளதாக நாகபடுவான் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

வலைப்பாடு, வேரவில் கிராஞ்சி பகுதி மக்களை பொறுத்தவரை பொது அபிவிருத்தி தொடர்பிலும், தனிப்பட்ட தேவைகளுக்காகவும் சுமார் 15 மைல் தூரம் ஏ52 வீதி வரை பயணித்து அங்கிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரத்தை கடந்தே பிரதேச செயலகத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது என வலைப்பாடு கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வலைப்பாடு - பல்லவராயன் கட்டு வீதியை பயன்படுத்தும் சுமார் 300 இற்கும் அதிகமான குடும்பங்கள் முறையான பேருந்து போக்குவரத்து இன்மையால் பூநகரி பிரதேச செயலகத்துக்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பூநகரி பிரதேச செயலகத்துக்கு சென்று வருவதென்றால் அது எமக்கு ஒரு முழுநாள் வேலையாகவுள்ளது என அவர்கள் குறிப்பிட்டனர்.

இவ் அலுவலகத்திற்கு காலை 7 மணிக்கு புறப்பட்டால் இங்குள்ள் மக்கள் வீடு திரும்புவதற்குள் மாலையாகிவிடும் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதிலிருந்து இங்குள்ள மக்கள் அரசின் வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொள்ளும் வரை அனைத்து தேவைகளுக்காகவும் முழுநாளை செலவிட்டுச் சென்ற போதும சில சமயங்களில் பல்வேறு காரணங்களுக்காக குறித்த தேவையை பூர்த்தி செய்யமுடியாமல் போன சந்தர்ப்பங்களும் அநேகமாக கிராந்தி மேற்கு கமக்கார அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள மக்களின் போக்குவரத்து சிரமங்களை கவனத்திலெடுத்து தனியான பிரதேச செயல்க ஒன்றை எமது பகுதிக்கென முடிந்தவரை விரைவில் அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தம்
## முல்லை. மாவட்ட செயலருக்கு மனு

(முல்லைத்தீவு)

சமுர்த்தி அலுவலரின் தன்னிச்சையான முடிவு காரணமாக மாற்றுத்திறனாளி பெண்ணொருவரின் சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோரிடம் பாதிக்கப்பட்ட பெண் மனுக் கையளித்துள்ளார். முல்லைத்தீவு துணுக்காய் பழைய முறிகண்டிக் கிராமத்தினைச் சேர்ந்த குறித்த பெண் நேற்றுமுன்தினம் மனுக்கையளித்துள்ளார்.

தன்னுடைய் குடும்பத்தில் கணவருடன் சேர்த்து ஐந்து பேரெனவும் முள்ளிவாய்க்காலில் போர் இடம்பெற்ற காலத்தில் படுகாயமடைந்த நிலையில் தான் மாற்றுத்திறனாளியாகவுள்ளதாகவும், மாற்றுத்திறனாளிகளுக்குக் கிடைக்கின்ற சிறிய உதவியை காரணங்காட்டி சமுர்த்தி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். குறித்த சமுர்த்தி அலுவலர் தமது கிராமத்தில் பொது மண்டபம் உள்ள நிலையிலும் தனியார் வீடொன்றிலேயே சமுர்த்தி அலுவலகத்தினை நடாத்திவருவதாகவும், உதவி வழங்குகின்றபோது சமுர்த்திக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து வசதியானவர்களுக்கும் தனிநபர்களுக்கும் உதவிகளை பெற்றுக்கொடுத்துள்ளதாகவும், மாற்றுத்திறனாளியான தனக்கு உதவி நிறுத்தப்பட்டுள்ளது தொடர்பாக குறித்த சமுர்த்தி அலுவலரிடம் கேட்டபோது மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி கிடைக்கின்றதுதானே அதன் காரணமாகத்தான் சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எமது கிராமத்தில் வசதியானவர்களுக்கு சமுர்த்தி வழங்கப்படுவது தொடர்பாக மேலதிகாரிகளிடம் தெரிவிக்கப்போவதாக தான் கூறிய போது தன்னைப்பற்றி பிரதேச செயலரிடமோ மாவட்ட செயலரிடமோ தெரிவித்துப் பயனில்லையெனவும் சமுர்த்தி அலுவலர் தெரிவித்ததாக மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தன்னுடைய குடும்ப நிலைமையினைக் கருத்திற்கொண்டு சமுர்த்திக் கொடுப்பனவினை மீளவழங்க நடவடிக்கையெடுக்குமாறும் குறித்த பெண்ணினால் மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

# வெளியுறவு அமைச்சிற்கு தெரியாத ஒபாமாவின் இலங்கை விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இலங்கை விஜயம் குறித்து தமக்கு எதுவும் தெரியாதென இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதியில் ஒபாமா இலங்கை வரவுள்ளதாக பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

எனினும் வெளியுறவு அமைசசின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே, இந்த விஜயம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளமை தமக்குத் தெரியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த வருட இறுதியில் ஒபாமா ஆசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ள தென்று கொலன்னே தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் இலங்கைக்கான முதல் விஜயம் என்ற வகையில் ஒபாமாவின் வருகையை அரசாங்கம் வரவேற்பதாகவும் கொலன்னே கூறியுள்ளார்.

# வேகமாகச் செல்லும் வாகனங்களால் யாழ்.நகரில் நோயாளர்கள் அவதி

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள பாதசாரிகளின் வீதிக்கடவைகளின் வீதியால் செல்லும் வாகனங்கள் வேகமாகச் செல்வதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வைத்தியசாலையினையும் அதனை அண்டியுள்ள வீதிகளும் நோயாளிகளின் போக்குவரத்தை கூடுதலாக கொண்டிருப்பதால் வைத்தியசாலை முன்பாக வாகனங்கள் நிதானத்துடன் செல்வதை உறுதிப்படுத்த ஏற்பாடுகள் தேவை என்பதை நோயாளிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீதியைக் கடக்கும் போது வாகனங்களின் இரைச்சலால் பதற்றத்துடனே வீதியைக் கடக்க வேண்டியுள்ளது. வைத்தியசாலைக்கு முன்பாக எந்த நேரமும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுவது அவசியம் என அங்கு பணி புரியும் ஊழியர் ஒருவர் குறிப்பிட்டார்.

வாகனங்களின் வேகம் போன்றே அவற்றின் எண்ணிக்கையும் இன்று அதிகரித்து விட்டன.

நகருக்குள் வரும் வாகனங்களைக் கட்டுப்படுத்த ஏற்பாடுகள் இல்லாவிட்டால் வீதியில் பொதுமக்கள் நடமாடுவதே பெரும் ஆபத்தான பிரச்சினையாக எதிர்காலத்தில் உருவெடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (23)

## காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தலமையில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள 262 பயனாளிகளுக்கு மேட்டு நிலக்காணியும் 136 பயனாளிகளுக்கு வயல் காணியும் வைபவ ரீதியாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக்கட்சியின் வன்னி அமைப்பாளருமான உனேஸ் பாரூத் வழங்கி வைத்தார். அத்துடன் வவுனிக்குளம் மீன்பிடி தொழிலாளர்களையும் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக கேட்டு வாழ்வாதாரம் வழங்கு வதாகவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)




# ஃபேஸ்புக் அடிமைகளா நாம்?

சைபர்சிம்மன்

உழைப்பு யாருடையது, செல்வம் யாருடையது... என்பது மக்கள் கவிஞரான செரபண்ட ராஜுவின் கவிதை வரி.

இந்த ஆவேச வரிகள் உழைக்கும் மக்களுக்காக எழுதப்பட்டவை. ஃபேஸ்புக் தொடர்பாக அமெரிக்கரான மைக்கேல் ரோசன்பிளம் என்பவர் எழுதியுள்ள கட்டுரையை படிக்கும் போது இந்த வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன. உழைப்பாளிகளுக்கான செரபண்ட ராஜுவின் தார்மீக கோபம் போல, ரோசன்பிளம் இணையவாசிகளின் சார்பில், உள்ளடக்கம் யாருடையது, செல்வம் யாருடையது? என கேட்டு இந்தப் பத்தியை எழுதியிருக்கிறார்.

ஹஃபிங்டன் போஸ்ட் இணைய இதழில் ஃபேஸ்புக்கை தொழிற்சங்கமயமாக்குவோம் (Let's Unionize Facebook) எனும் தலைப்பில் எழுதியுள்ள இந்தப் பத்தியில், அவர் நாமெல்லாம் ஃபேஸ்புக் அடிமைகளா? என்று கேள்வி எழுப்புகிறார். ஃபேஸ்புக்குக்கு மட்டும் அல்ல, டுவிட்டர் அடிமைகள், இன்ஸ்டாகிராம் அடிமைகள் என்றும் குறிப்பிடுகிறார். இந்த இணைய சேவைகளுக்காக நாம் ஓயாமல் உள்ளடக்கத்தை உருவாக்கி கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் அவர் குறைப்பட்டுக் கொள்கிறார்.

இந்தக் கருத்துக்கு அவர் வந்து நிற்கும் விதம்தான் கவனத்துக்கு உரியது. வரலாற்றின் இடைப்பட்ட காலமான 15 ஆம் நூற்றாண்டில் நிலமே பெரும் செல்வமாக கருதப்பட்டதாகவும், பெரும் நிலப் பரப்பை கொண்ட பிரபுக்களிடம் பலரும் அடிமைகளாக வேலை பார்த்தனர் என்றும் குறிப்பிடுகிறார்.

## சைபர்வெளி அடிமைகள்


காலம் மாறியிருக்கிறதே தவிர வரலாறு மாறவில்லை. இன்று நிலம் என்பது சைபர்வெளியாகி இருக்கிறது, அதில் நாமெல்லாம் அடிமைகளாக இருக்கிறோம், அமேசானின் ஜெப் பெசோசும், ஃபேஸ்புக்கின் ஷுக்கர்பெர்க்கும் இணைய பிரபுக்களாக நமது உள்ளடக்கத்தைக் கொண்டு செல்வம் சேர்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

ஃபேஸ்புக்கின் 100 சதவீத உள்ளடக்கம் நம்முடையது அல்லவா எனக் கேட்கும், இதை இலவசமாக செய்து கொண்டிருக்கும் முட்டாள்கள் அல்லவா நாம் என்றும் கேட்கிறார். தினமும் நாம் எந்த ஊதியமும் பெறாமல், ஷுக்கர்பெர்க்கின் இணைய நிலத்தில் குடியிருக்கும் உரிமைக்காக அவருக்காக உள்ளடக்கத்தை உருவாக்கி கொண்டிருக்கிறோம் என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார். ஷுக்கர்பெர்க்கின் 33 பில்லியன் டொலர் செல்வமும் நாம் சேர்த்துக் கொடுத்தது என்கிறார்.

இதன் பிறகு அவர் சொல்லும் விஷயம் என்ன தெரியுமா? 20 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள தொழிலாளர்கள் தங்களிடம் உழைப்பு எனும் சக்தி இருப்பதை உணர்ந்து கொண்டு. அதன் ஆற்றலை உணர்த்த தொழிற்சங்கம் அமைத்துக் கொண்டது போல, ஃபேஸ்புக் பயனாளிகள் தொழிற்சங்கம் அமைக்கலாகாதா? என்றும் ரோசன்பிளம் கேள்வி எழுப்புகிறார்.

## ஃபேஸ்புக் குக்காக உழைப்பு!

நிச்சயம் புதுவிதமான சிந்தனை தான். அதற்காக ஃபேஸ்புக்குக்கு எதிராக நாம் கொடி பிடித்துப் போராட வேண்டும் என்று அர்த்தமில்லை. ஆனால், நிச்சயம் நமது ஃபேஸ்புக் பழக்கம் பற்றி யோசித்தாக வேண்டும். ஃபேஸ்புக்கை இலவச சேவையாக கருதி மகிழ்ச்சியுடன் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் நமது உள்ளடக்கத்தை வைத்து ஃபேஸ்புக் விளம்பர வருவாயை அள்ளிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடுகிறோம். நம்மை அறியாமல் நாம் ஃபேஸ்புக் போன்ற தளங்களுக்காக அடிமைகள் போல உள்ளடக்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.



இந்தக் கருத்து உங்களுக்கு ஏற்புடையதாக இல்லாமல் இருக்கலாம். சமூக வலைப் பின்னலாக அது ஏற்படுத்தி தரும் பலன்களை வைத்து நீங்கள் வாதிடலாம். உண்மை தான், ஃபேஸ்புக் இணைய யுகத்தில் நட்புக்கும், தகவல் பரிமாற்றத்துக்கும் இன்னும் பல பயன்களுக்கும் வித்திட்டிருக்கிறது. மறுப்பதற்கில்லை. பல நேரங்களில் ஃபேஸ்புக் போன்ற சேவைகள் சமூக் ஊடகங்களாக செயற்படுகின்றன. எகிப்திலும் வளைகுடா நாடுகளிலும் மலர்ந்த சமூகப் புரட்சியில் ஃபேஸ்புக்குக்கும் அதன் சமூக சகாக்களுக்கும் முக்கிய பங்கிருக்கிறது. இன்னும் நிறைய உதாரணங்கள் இருக்கின்றன.

## ஃபேஸ்புக் பயன்பாடு

ஃபேஸ்புக்கை நாம் எப்படிப் பயன்படுத்தப் பழகியிருக்கிறோம் என்பது தான் பிரச்சினை. சமூக வலைப் பின்னலாக ஃபேஸ்புக்கின் ஆதார பலம் நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள், அவர்களின் நண்பர்கள் என நட்பு வளையத்தை விரியச்செய்வதுதான். இந்த நட்பு வளையத்தில் எதைப் பகிர்ந்து கொள்கிறோம் என்பதும், எதற்காக பகிர்ந்து கொள்கிறோம் என்பது முக்கியமானது இல்லையா?

எல்லாவற்றையும் நிலைத்தகவலாக பகிர்ந்து கொள்வது இயல்பாக இருக்கிறது. வீட்டு விஷேசத்தில் எடுத்த புகைப்படங்களையும், சுற்றுலா பயணத்தில் எடுத்த புகைப்படங்களையும் எந்த யோசனையும் இல்லாமல் ஃபேஸ்புக்கில் பகிர்கிறோம். அதனால் என்ன வந்துவிடப் போகிறது?

ஆனால், உங்கள் தனிப்பட்ட பயணம் பற்றிய புகைப்படம், நண்பர்களின் நண்பர்களுக்கு எந்த விதத்தில் அவசியமானது என்று யோசித்துப்பாருங்கள்? உங்கள் மகனுடனோ, மகளுடனோ இருக்கும் புகைப்படம் நிலைத்தகவலாக வெளியிடுவது எதற்காக? அவற்றுக்கு காரணம் இல்லாமல் கிடைக்கும் லைக்குகளை விட்டுத்தள்ளுங்கள்.

புகைப்படங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வது இயல்பானது தான். வீட்டுக்கு வரும் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் புகைப்பட ஆல்பத்தை காண்பித்து மகிழ்வது வழக்கமானது தான். ஆனால் நன்றாக யோசித்துப்பாருங்கள், எல்லோரிடமும் நீங்கள் இவ்வாறு செய்வதில்லை. அதற்கு ஒரு பரஸ்பர நெருக்கம் தேவை. வரவேற்பறையில் பேசிக் கொண்டிருக்கும் எல்லா நண்பர்களுக்கும் நீங்கள் புகைப்பட ஆல்பத்தை காட்ட விரும்பமாட்டீர்கள். அதற்கான நெருக்கமும் இணக்கமும் இல்லாத நிலையில் அந்த நண்பரும் கூட அதை விரும்பமாட்டார். இதெல்லாம் எழுதப் படாத சமூக விதிகள். இயல்பாக எல்லோரும் அனுசரித்து நடப்பவை.

## தனியுரிமை கவலை

ஆனால் ஃபேஸ்புக்கில் சொந்த ஊர் பயண புகைப்படங்களை பகிர்ந்து கொள்வது எந்தவகையான வெளிப்பாடு? ஊர் மாறியிருக்கிறது, விவசாயம் மங்கிவிட்டது போன்ற பொதுவான எண்ணங்களை பகிர்ந்து கொள்ளலாம். கிராமத்து மண்வாசத்தையும் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் தனிப்பட்ட குடும்பக் காட்சிகளை சித்தரிக்கும் புகைப்படங்களை பகிர்வது எதனால்? உங்கள் பிள்ளைகளின் புகைப்படங்களும் குடும்பத்தின் புகைப்படங்களும் தேவையில்லாமல் இணையத்தில் எல்லா இடங்களிலும் இறைந்து கிடப்பது நல்லதல்ல.

> **வேலைக்கு ஆள் எடுக்கும் நிறுவனங்கள், விண்ணப்பித்தவர்கள் பற்றி தகவல்கள் சேகரிக்க சமூக வலைப்பின்னல் பக்கங்களை அலசிக்கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? விண்ணபத்தில் குறிப்பிடும் தகவல்களை எல்லாம் விட ஒருவரைப் பற்றிய சித்திரத்தை அவரது சமூக வலைப்பின்னல் பதிவுகள் உணர்த்தி விடுவதாக கருதப்படுவதும் உங்களுக்குத் தெரியுமா? இன்சூரன்ஸ் நிறுவனங்கள் ஃபேஸ்புக் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு செயற்படுவதாக கூறப்படுவதை அறிந்திருக்கிறீர்களா?**

வேலைக்கு ஆள் எடுக்கும் நிறுவனங்கள், விண்ணப்பித்தவர்கள் பற்றித் தகவல்கள் சேகரிக்க சமூக வலைப்பின்னல் பக்கங்களை அலசிக்கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? விண்ணப்பத்தில் குறிப்பிடும் தகவல்களை எல்லாம் விட ஒருவரைப் பற்றிய சித்திரத்தை அவரது சமூக வலைப் பின்னல் பதிவுகள் உணர்த்தி விடுவதாக கருதப்படுவதும் உங்களுக்குத் தெரியுமா? இன்சூரன்ஸ் நிறுவனங்கள் ஃபேஸ்புக் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு செயற்படுவதாக கூறப்படுவதை அறிந்திருக்கிறீர்களா?

நேற்று நீங்கள் ஃபேஸ்புக்கில் எந்தச் சிந்தனையும் இல்லாமல் பகிர்ந்து கொண்ட தகவலும் புகைப்படமும் என்றேனும் ஒரு நாள் உங்களுக்கு வில்லங்கமாக முடியும் வாய்ப்பு உள்ளது என்பதும் தெரியுமா?

## என்ன செய்யலாம்?

அதற்காக ஃபேஸ்புக் பயன்பாடே தவறு என்று பொருள் அல்ல. அது உங்கள் விருப்பம் உரிமையும் கூட. ஃபேஸ்புக்கைப் பயன்படுத்துங்கள், ஆனால் எதற்காக பயன்படுத்துகிறோம் என யோசிக்கவும் செய்யுங்கள். லைக்குகளுக்கும், கமெண்ட்ஸுக்கும் ஆசைப்பட்டு நீங்கள் பொதுவில் பகிர விரும்பாத எதையும் இணையத்தில் ஆவணப்படுத்தாதீர்கள். இணையத்தில் வெளியிட்ட எதையும் நீங்கள் திரும்ப பெற முடியாது? உங்கள் பக்கத்தில் டெலிட் செய்தாலும் அதற்கு முன்பாகவே அதன் நகல் இணையத்தில் பல இடங்களில் பதிவாகி இருக்கும்.

எனவே, எதையும் பகிரும் முன், இது சமூக வெளிக்கு ஏற்றதா என யோசியுங்கள். கருத்துகள் என்றால் வலைப் பதிவாக எழுத முடியுமா என முயன்று பாருங்கள். புகைப்படங்கள் என்றால் இமெயில் மூலம் தேர்ந்தெடுத்த நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமா என யோசியுங்கள்.

## விக்கி வாழ்க!

வலைப்பதிவு யுகம் முடிந்து ஃபேஸ்புக் யுகம் துவங்கியிருப்பதாக கருதப்படும் நிலையில், பலரும் வலைப்பதிவுக்கு முழுக்குப் போட்டு ஃபேஸ்புக் படைப்பாளிகளாக மாறுகிறார்கள் என்று சொல்லப்படும் காலத்தில் இந்த எதிர்க்கருத்து ஆச்சர்யத்தை அளிக்கலாம். ஆனால் இணையத்தில் தனியுரிமையின் அவசியத்தையும் அதன் அலட்சியத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் மெல்ல உணரத் துவங்கியிருக்கிறோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

எல்லாவற்றையும் பகிரும் போக்கு பற்றிய கேள்விகளை எழுப்புவதுதான் நோக்கம்.

இன்னொரு முக்கிய விஷயம், சமூக ஊடகப் பயன்பாட்டில் ஒருவர் தனக்கான சரியான வலைப்பின்னலைக் கண்டுகொள்வதும் முக்கியம். கல்லூரி மாணவர்களுக்கும், பணியிடத்தில் இருப்பவர்களுக்கும் ஃபேஸ்புக் பயன்பாடு கேளிக்கையைத் தரலாம். ஆனால் தொழில்முறை நபர்களுக்கான லிங்க்டுஇன் சமூக வலைப்பின்னல் தங்களுக்கு இன்னும் பொருத்தமாக இருக்காதா? என யோசிக்க வேண்டும்.

இவ்வளவு ஏன் விக்கிபீடியா கூட சமூக வலைப்பின்னல் ரகத்தைச் சேர்ந்ததுதான் தெரியுமா? ஓயாமல் நிலைத் தகவல் பதிவு செய்வதற்கு நடுவே விக்கிபீடியாவிலும் நல்ல தகவல்களைப் பகிர்ந்து கொள்ளலாமே!

ஃபேஸ்புக் தொடர்பான மைக்கேல் ரோசன்பிளம்' கட்டுரை: http://www.huffingtonpost.com/michael-rosenblum/lets-unionize-facebook_b_7526822.html?ir=India&adsSiteOverride=in

# சுயாதீன ஆணைக்குழுவை நிறுவாமல் தேர்தலுக்கு செல்ல வேண்டாம்

## – வலியுறுத்துகிறது கபே –

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றுவதற்கு முன்னர் சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட வேண்டும் என கபே எனப்படும் தந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் அஹமட் மனாஸ் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

19ஆவது திருத்தச் சட்டத்தின் படி சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கான சூழல் ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் முறைமை மாற்றத்தை கொண்டுவரும் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிடாது, சில அரசியல்வாதிகளின் தனிப்பட்ட காரணத்தினால் பொதுத் தேர்தலுக்குச் செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் 20 வருட காலமாக மக்கள் எதிர்பார்த்திருந்த சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபிப்பதற்கான சந்தர்ப்பம் 19 ஆவது திருத்தச் சட்டத்தினால் கிடைக்கப்பெற்றிருக்கின்றது.

ஆனாலும், இம்முறை தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படாமல் பொதுத் தேர்தலுக்குச் சென்று பின்னர் அந்த ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு சிலர் யோசனை முன்வைத்து வருகின்றனர்.

அவ்வாறு தேவையான சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவை நிறுவாமல் சொந்த இலாபத்தைக் கருதி இவ்வாறு அவர்கள் செயற்படுவதை வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

# வெலியமுனவின் அறிக்கை வெளிப்படுத்தாத ரணில்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் முறைகேடுகள் தொடர்பில் வெலியமுன - ஜெயரத்ன அறிக்கை வெளியாகி 77 நாட்கள் கடந்துள்ளன.

இந்த அறிக்கை 77 நாட்களுக்கு முன்னர் பிரதமர் மந்திரி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. எனினும் அந்த அறிக்கையை இன்னும் பிரதமர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவில்லை.

இது நல்லாட்சிக்காக வாக்களித்த மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பின் ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த முறைகேடு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனரும் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸின் முன்னாள் தலைவருமான நிசாந்த விக்ரமசிங்கவின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த முறைகேட்டினால் பல மில்லியன் ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் 6800 பணியாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றமற்றவர் சேனுகா



வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் சேனுகா செனவிரட்ன குற்றம் செய்யவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சேனுகாவிற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலையான சேனுகா தாய்லாந்திற்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிறுவனமொன்றுக்கு ஜெனீவாவிற்கான இலங்கைக்கான தூதரக புனரமைப்பு பணிகளை வழங்கியதாக சேனுகா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜெனீவாவிற்கான தூதுவராக கடமையாற்றிய காலத்தில் இவ்வாறு வழங்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் டி.எச்.பி. எதிரிசிங்க விசாரணை நடத்தியிருந்தார்.

விசாரணைகளின் மூலம் சேனுகா குற்றமற்றவர் என நிரூபணமாகியுள்ளதாக எதிரிசிங்க அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# விகாரை பூசைகளை விடுத்து அரசியல் மேடைகளில் ஏறத்தயார்

## – மகிந்த தெரிவிப்பு –

(கொழும்பு)

இலங்கையின் கலாசாரத்தை மாற்றியமைக்க சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். நாடு போய்க்கொண்டிருந்த திசையிலிருந்து மாற்றி, வேறு திசையை நோக்கி நாட்டை இழுத்துச் செல்ல அந்த தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



எதிர்காலத்தில், விகாரைகளில் இடம்பெறும் பூஜைகளுக்கான மேடைகளில் ஏறுவதை விடுத்து, அரசியல் மேடைகளில் ஏறப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள விகாரையொன்றில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி, அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "சிங்களவர்களின் கலாசாரத்தை தூரமாக்கிப் பார்ப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர். மனித உரிமைகள், சமத்துவம் பற்றிப் பேசி, இனத்தை அழிக்கும் சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது" என்றார்.

# யுகப்புருஷரான மகிந்தவை தோற்கடித்தது மாபெரும் தவறு

## – என்கிறார் உதயகம்மன்பில –



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்ற ஓர் யுகப் புருஷரை தோற்கடித்தமை ஓர் வரலாற்றுத் தவறாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அண்மையில் திவுலபிட்டியவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசாங்கத்தை ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது மைத்திரிபால சிறிசேனவோ தோற்கடிக்கவில்லை.

பராக் ஒபாமா, நரேந்திர மோடி போன்றவர்கள் கூட்டாக இணைந்து மகிந்தவை தோற்கடித்தனர்.

ஜோன் கெரி, நரேந்திர மோடி போன்றவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தமை தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தவேயாகும்.

இலங்கைக்கு விஜயம் செய்த நரேந்திர மோடி மற்றும் ஜோன் கெரி இலங்கைக்கு உதவியாக ஒரு சதமேனும் நிதி உதவி வழங்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஓர் யுகப் புருஷர்.

அவ்வாறான ஓர் அரச தலைவரை தோற்கடித்தமை வரலாற்றில் நாம் செய்த மாபெரும் தவறாகவும், முட்டாள்தனமாகவும் கருதப்பட வேண்டும்.

இன்னும் 40 ஆண்டுகளில் நாட்டின் எரிபொருள் வளம் இல்லாமற் போய்விடும்.

மன்னாரில் காணப்படும் எரிபொருள் வளங்களை சூறையாடவே வெளிநாட்டு சக்திகள் முயற்சியை மேற்கொள்கின்றன.

இலங்கையை இந்தியாவினதோ அல்லது அமெரிக்காவினதோ காலனியாக மாற்ற இடமளிக்க முடியாது என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியலிலிருந்து தூரவிலகி பிள்ளைகளைக் கவனியுங்கள்

## – கோத்தாவிற்கு அறிவுரை –



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை அரசியலில் இருந்து விலகியிருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்திப்பதற்காக கோத்தாபாய ராஜபக்ஷ கண்டிக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் மகாநாயக்கர் கலகம ஸ்ரீ அத்ததஸ்சி தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மேற்கொண்ட பணிகள் திருப்திகரமானதாக அமைந்ததாகவும் அடுத்து நீங்கள் ஓய்வாக இருப்பதும் அரசியலில் இருந்து விலகிக் கொள்வதும் சிறந்தது என தெரிவித்த மகாநாயக்க கலகம ஸ்ரீ அத்ததஸ்சி தேரர் ஓய்வாக இருந்து பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்துமாறும் கேட்டுக் கொணடுள்ளார்.

நாட்டிற்காக பாரியதோர் கடமையைச் செய்து முடித்தமைக்காக தனது நன்றிகளைத தெரிவித்துக் கொள்வதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது பாதுகாப்புச் செயலாளர் மகாநாயக்க கலகம ஸ்ரீஅத்ததஸ்சி தேரரிடமிருந்து ஆசிகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த சில மாதங்களில் அபிவிருத்தித் திட்டங்கள்

## – ஹர்ஷ டி சில்வா நம்பிக்கை –

இன்னும் சில மாதங்களில் நாடு மிகப்பாரிய அபிவிருத்திகளில் முன்செல்லும் என தான் எதிர்பார்ப்பதாக திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் பலர் மாற்று கருத்துக்களை தெரிவிக்கின்றனர் என்றும் அவை உண்மையில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் சிறு வேலைத்திட்டங்களுடன் பாரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் தொடரவுள்ளதுடன் எதிர்வரும் மாதங்களில் பாரிய அபிருத்தித திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அமைச்ச்ர் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.



## ஆட்டோ குடைசாய்ந்து இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ குடைசாய்ந்ததில் அதில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐயனார்கோவிலடி கொடிகாமத்தைச் சேர்ந்த நல்லதுரை ஜெயதீபன் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

ஏ-9 வீதியில் நாவலடிப்பகுதியில் ஆட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்துககுள்ளாகியது. இதன்போது வாகனத்தைச் செலுத்திய இளைஞரே படுகாயமடைந்துள்ளார். (இ)

## வீதியைப் புனர்மைக்க மக்கள் கோரிக்கை

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட உதயபுரம் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ளமையால் அதனைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியூடாகவே பேசாலை மகா வித்தியாலய மாணவர்கள் பயணம் செய்வதனால் அதனை. கவனத்தில் கொண்டு உரியவர்கள் வீதியைப் புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மோதல்கள் திருட்டுச் சம்பவங்களால் அச்சநிலையில் ஏழாலை மக்கள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலைப்பகுதியில் தொடரும் இளைஞர் குழுக்களுக்கிடையிலான மோதல் மற்றும் திருட்டுச்சம்பவங்கள், வழிப்பறிக் கொள்ளைகளினால் ஏழாலை மக்கள் அச்சத்துடனும் பய உணர்வோடும் வாழும் சூழல் உருவாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலைப பொழுதில் ஏழாலை மத்தியில் இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றதாகவும் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சிலரை கைது செய்து சென்றதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் ஏழாலைப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரை இரவு வேளை வழிமறித்து மோட்டார் சைக்கிளைப் பறித்துச் சென்றமை மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது ஏழாலைப்பகுதியில் இரவு, பகல் என்று பாராது இளைஞர் குழுக்கள் குறுக்கு வீதிகள் மற்றும் சிறிய ஒழுங்கைகளில் மோடடார் சைக்கிள்களில் அதிவேகமாக செல்லுதல், ஏழாலைப்பகுதியில் முன், பின் அறிமுகம் இல்லாத சிலர் மக்கள் நடமாட்டமற்ற வீடுகளிலும் மற்றும் தனித்திருப்போர் வீடுகளிலும் சென்று முகவரிகளை விசாரிப்பதால் பொது மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர்.

இரவு வேளைகளில் ஏழாலைப் பகுதிகளில் இளைஞர்களது நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள் திருடர்கள் மற்றும் தேவையற்ற விதத்தில் இரவு, பகல் வேளைகளில் வீதிகளில் ஏனைய இடங்களில் கூடிநிற்கும் இளைஞர்களை கட்டுப்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (66)

## போதைப் பொருட்களை எதிர்த்து நடைபவனி

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் போதைப் பொருட்களுக்கு எதிரான நடைபவனி ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

சித்தன்கேணி சிவன் தேவஸ தானத்தில் ஆரம்பமாகும் இப் பேரணி சங்கானை பேருந்து நிலையத்தில் நிறைவடையும். இந் நடைபவனியில் ஆர்வமுள்ள அனைவரையும் பங்கு பற்றுமாறு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனக் குழுவின் நெறியாளர் தெரிவித்துள்ளார்.

## முல்லைத்தீவு இத்திமடு நாகதம்பிரான் வருடாந்த பொங்கல் விழா பிற்போடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இத்திமடு நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பெரிய இத்திமடு நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை திருவிழாக் காலமாக இருந்தபோதிலும் நடைபெற இருந்த புதூர் நாகம்பிரான் ஆலயத்தின் பொங்கல் உற் சவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற மையால் இதனைக் கருத்திற் கொண்டு ஆலய பரிபாலன சபையினால் இப்பொங்கல் உற்சவம் பிற்போடப்பட்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

இதனை அடியார்களுக்கு ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (40)

## ஆசிரியர் கலாசாலையில் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய பயிலுநர்களின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

கற்றல் வளங்களை ஆசிரிய பயிலுநர்களுக்கு அடையாளப்படுத்தும் நோக்குடன் இடம்பெறவுள்ள இக்கண்காட்சியில் ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான கற்பித்தல் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

ஆர்வமுள்ள எவரும் இக்கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட்டுப் பயன்பெறலாம். (90)

## மது ஒழிப்பு தொடர்பான பேரணியும் கலந்துரையாடலும்



(நெடுங்கேணி)

மது ஒழிப்பு தொடர்பான பேரணியும் கலந்துரையாடலும் நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் தற்போது மது போதையும் புகைத்தலும் சிறுவர் தொட்டு முதியோர் வரை அதிகரித்து வருவதைக்கண்டித்து வவுனியா வடக்கு பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பமாகி நெடுங்கேணி மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்து பாடசாலை மாணவர் மட்டத்தில் இது தொடர்பான விழிப்புனர்வு இடம் பெற்றுள்ளது.

மது போதையில் அதிகளவானோரை ஈடுபட்டு வருவது தொடர்பான் விழிபபுணர்வுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் வவுனியா மாவட்ட தொற்று நோய் தடுப்பு பிரிவின் வைத்தியர் டி.என்.தவப்பிரகாசம் விளக்கமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# நிறைபோதையில் அந்தண இளைஞர் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

நிறை போதையில் வந்த அந்தண இளைஞர் ஒருவர் ஊடகவியலாளரை பாரிய கல்லால் எறிந்து தாக்குவதற்கு முயற்சித்ததாகவும் அவரை வாளால் வெட்டிக் கொலை செய்வேன் என அச்சுறுத்தியதாகவும் தெரிவித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை குறித்த ஊடகவியலாளனால் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஊடகவியலாளர் தனது வீட்டு வாசலில் அமர்ந்திருந்த பொழுது மது தலைக்கேறிய நிலையில் வந்த இந்த அந்தண இளைஞர் தகாத வார்த்தைகளால் அவரைத் தூசித்ததாகவும், வாளால் வெட்டிக் கொலை செய்வேன் எனப் பயமுறுத்தியதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவிலில் 20 வருடங்களுக்கு மேலாகியும் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை எனவும், ஆலயச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன எனத் தெரிவித்தும், வேறு பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டும் பொதுமக்கள் பலர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று அமைச்சர், அரச அதிபர், பிரதேச செயலர் போன்ற ப்லருக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் அப்போது நல்லூர் பிரதேச செயலாளராகவிருந்த பா.செந்தில் நந்தனன் தலைமையில் ஆலய மண்டபத்தில் பொது மக்கள் அடங்கிய கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு ஆலயத்துக்கான நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமான செய்தி ஊடகங்களில் வெளியானது.

இதனாலேயே ஊடகவியலாளர மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நிர்வாக சபையின் உபதலைவர் ஆலயவழிபாட்டுக்காக வந்த போது மதுபோதையில் அவரைத தாக்கியதாக இவ் அந்தண இளைஞர் மீது கோப்பாய் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இளைஞர் பொலிஸ நிலையத்துக்கு அழைத துவரப்பட்டு இது சம்பந்தமாக அன்று காலை எச்சரிக்கை செய்யப பட்டிருந்தார். அதே நாளில் மாலையே போதை நிறைந்த நிலையில் வந்து ஊடகவியலாளரை இவர் தாக்குவதற்கு முயற்சித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

## முரசின் இன்றைய பலன்

(19.06.2015 வெள்ளிக்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 4 ஆம் திகதி.
சித்தம்-யோகம் / திருதியை - திதி.
புனர்பூச நட்சத்திரம் மு.ப.- 8.16 வரை பின் பூசம்
இராகுகாலம் 10.24 - 11.54 வரை சுப நேரம் 5.54 - 7.24 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
அசாதாரண வேகத்தைக் குறைக்காவிடின் விபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாதிருக்கும்

**ரிஷபம்**
பொறுப்பின்றி உதவி செய்ய வேண்டாமென துணைவியார் தடுத்துவிடல்

**மிதுனம்**
விளையாட்டு/ கலைத்துறையினர் பாராட்டும் பரிசில்களும் பெறல்

**கடகம்**
தற்காலிக அரசுப்பணி நிரந்தரமாக்கப்படும் செய்தியறிதல்

**சிம்மம்**
விவாகம் இழுபடுவதினால் சாந்தி செய்ய தெய்வத்தலத்தை நாடுதல்

**கன்னி**
எதிர்பார்த்த உதவி கிட்டாமையால் மனக்கிலேசம் அடைதல்

**துலாம்**
உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள எடுத்த முயற்சியினால் நோயின் ஆதிக்கம் குறைதல்

**விருச்சிகம்**
வெற்றுக் காசோலையில் கையெழுத்தினை வைத்துப் பின் துயரப்பட வேண்டாம்

**தனுசு**
உடையவன் பாராவேளை ஒரு முழம் கட்டை என்பதை மறுக்க வேண்டாம்

**மகரம்**
புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டாமென பிதா தடுத்துவிடல்

**கும்பம்**
ஓடிச்சென்று ஏறமுற்பட்ட வேளை விபத்தினின்றும் தப்பிவிடல்

**மீனம்**
போலியானவை வந்தடைவதில் எச்சரிக்கையுடன் இருக்கவும்

# கோபா அமெரிக்க கால்பந்து கொலம்பியாவிடம் வீழ்ந்தது பிரேசில்



(சான்டியாகோ)

44 ஆவது கோபா அமெரிக்க கோப்பை கால்பந்து போட்டி சிலியில் நடைபெற்று வருகிறது. தென்அமெரிக்க கண்டத்தின் ஜாம்பவான் யார் என்பதை நிர்ணயம் செய்யும் இந்தப்போட்டியில் 12 நாடுகள் பங்கேற்று உள்ளன

சி பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் பிரேசில் கொலம்பிய அணிகள் மோதின.

இதில் யாருமே எதிர்பார்க்காத வகையில் 8 முறை சம்பியனான பிரேசில் அணி அதிர்ச்சிகரமாக தோற்றது. ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே கொலம்பிய வீரர்கள் முன்னேறி தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். பிரேசில் அணியின் பின்களத்தை அவர்கள் எளிதில் ஏமாற்றி முன்னேறி ஆடினார்கள்.

ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் கொலம்பிய வீரர் ஜெய்சன் முரிலோ கோல் அடித்தார். இந்த கோலால் பிரேசில் வீரர்கள் அதிர்ச்சி அடைந்தனர். முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் கொலம்பியா 1-0 என்ற கணக்கில் முன்னணியில் இருந்தது.

2ஆவது பகுதி ஆட்டத்தில் பிரே சில் அணி கோல் அடிக்க கடுமையாக போராடியது. ஆனால் அதை கொலம்பியா பின்கள வீரர்கள் தடுத்துவிட்டனர்.

அதே நேரத்தில் கொலம்பியா 2ஆவது கோலை தவறவிட்டது. அந்த அணியின் முன்னணி வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் பந்தை அருமையாக கடத்தி வந்து கோல் கம்பத்துக்கு வெளியே அடித்துவிட்டார்.

ஆட்டத்தின் இறுதி வரை பிரே சில் அணியால் கோல் அடிக்க இயலவில்லை. இதனால் கொலம்பியா 1-0 என்ற கோல் கணக்கில் வென்று பிரேசில் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது.

ஆட்டத்தின் கடைசி நிமிடங்களில் பிரேசில் அணியின் கப்டனும், நட்சத்திர வீரருமான நெய்மருக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. அவர் 45 ஆவது நிமிடத்தில் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார். 94 ஆவது நிமிடத்தில் 2 ஆவது மஞ்சள் அட்டை பெற்றார். இதனால் அவர் வெளியேற்றப்பட்டார்.

சிவப்பு அட்டை காரணமாக பிரேசில் அணி மோதும் வெனிசூலாவுக்கு எதிரான முக்கியமான ஆட்டத்தில் நெய்மர் விளையாட இயலாது.

பிரேசில் அணி சந்தித்த முதல் தோல்வி இதுவாகும் . அந்த அணி தொடக்க ஆட்டத்தில் 2-1 என்ற கணக்கில் பெருவை வீழ்த்தி இருந்தது. கொலம்பியா பெற்ற முதல் வெற்றியாகும். அந்த அணி தொடக்க ஆட்டத்தில் வெனிசூலாவிடம் தோற்றிருந்தது.

# டோனியுடன் ஒப்பிடாதீர்



(டாக்கா)

இந்திய கிரிக்கெட் அணித் தல்லவர் டோனியுடன் என்னை ஒப்பிட வேண்டாம் என இந்திய டெஸ்ட் அணியின் அணித்தலைவர் ஹோலி கூறியுள்ளார்.


அணித்தலைவர் டோனியுடன் என்னை ஏன் ஒப்பிட வேண்டும்? நாங்கள் இருவரும் வெவ்வேறு குணாதிசயங்களையும், அணுகு முறையையும் கொண்டவர்கள்

யாருக்காகவும் என்னை ஒருபோதும் மாற்றிக் கொள்ள மாட்டேன். அணித்தலைவர் பதவியில் ஆக்ரோஷமாக செயறபடும் எனது உத்வேகம் தொடரும்.

நாம் என்ன சிந்திக்கிறோம் என்பது எதிரணிக்கு தெரிந்தால் அவர்களுக்கு அது பலமாக அமையும் என்பதை நான் உணருவேன்.

நல்ல அணித்தலைவர் களத்தில் செயறபடுகையில் உணர்ச்சிகளை முகத்தில் வெளிப்படையாக காட்டக் கூடாது. அந்த விடயத்தில் நான் இன்னும் முன்னேற்றம் காண வேண்டியது முக்கியமானதாகும் என்று தெரிவித்துள்ளார்.

# மகளிர் உலக கிண்ண கால்பந்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறிய அணிகள்



மகளிர் உலககோப்பை கால்பந்து போட்டி கனடாவில் நடைபெற்று வருகிறது. எப் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் பிரான்ஸ் 5:0 என்ற கோல் கணக்கில் மெக்சிக்கோவையும், இங்கிலாந்து 2:1 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவையும் வீழ்த்தின.

இதன்மூலம் இரு அணிகளும் 2 ஆவது சுற்றுக்கு முன்னேறின. எப் பிரிவில் நடந்த ஆட்டங்களில் பிரேசில் 1:0 என்ற கணக்கில் கோஸ்டாரிக்காவையும், தென்கொரியா 2:1 என்ற கணக்கில் ஸ்பெயினையும் வீழ்த்தின.

இதேவேளை நேற்றுமுன்தினம் சி பிரிவில் நடந்த கடைசி கட்ட லீக் ஆட்டங்களில் ஜப்பான் 1-0 என்ற கோல் கணக்கில் ஈகுவடாரை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.


கமரூன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தியது. இந்தப் பிரிவில் ஜப்பான் (9 புள்ளி), கேமரூன் (6 புள்ளி), சுவிட்சர்லாந்து (3 புள்ளி) ஆகிய அணிகள் நாக்-அவுட் என்ற 2ஆவது சுற்றுக்கு (ரவுண்ட் 16) முன்னேறியது. 3 ஆட்டத்திலும் தோல்வி கண்ட ஈகுவடோர் வெளியேறியது. டி பிரிவில் நடந்த ஒரு லீக்கில் அமெரிக்கா 1-0 என்ற கோல் கணக்கில் நைஜீரியாவை வென்றது.

அவுஸ்ரேலியா-சுவீடன் இடையிலான மற்றொரு ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது. இந்த பிரிவில் அமெரிக்கா (7 புள்ளி), அவுஸ்ரேலியா (4 புள்ளி) அணிகள் அடுத்த சுற்றை எட்டின.

சுவீடன் (3 புள்ளி) அணிக்கு, எஞ்சிய ஆட்டங்களின் முடிவை பொறுத்து நொக்-அவுட் சுற்று வாய்ப்பு கிடைக்குமா என்பது தெரிய வரும்.

ஒரு வெற்றியும் பெறாத நைஜீரியா மூட்டையை கட்டியது

# விதிமுறையை மீறிய முரளி விஜய்க்கு அபராதம்



துடுப்பில் நீளமான விளம்பர இலட்சினையை ஒட்டியுள்ளதாக புகார் எழுந்ததையடுத்து முரளி விஜய்க்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி கடந்த 14ஆம் தேதி முடிவடைந்தது. இந்தப் போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவையே சந்தித்தது. இதில் இந்திய வீரர் முரளி விஜய் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 150 ஓட்டங்களைக் குவித்தார்.

போட்டியின்போது அவர் தனது துடுப்பில் ஒட்டியிருந்த விளம்பர இலட்சினையானது 9 அங்குலத்திற்கு மேல் இருந்தது. ஐ.சி.சி.யின் புதிய விதிமுறைப்படி ஒரு வீரர் தனது துடுப்பில் விளம்பர இலட்சினையை 9 அங்குல நீளத்திற்கு மேல் ஒட்டக்கூடாது.

ஆனால், முரளி விஜய் வைத்திருந்த துடுப்பில் ஒட்டப்பட்டிருந்த விளம்பரம் 9 அங்குலத்திற்கு மேல் இருந்தது. இதனால் அவரது சம்பளத்தில் 25 சதவீத தொகை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது

# பிளாட்டரிடம் விசாரணை

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனமான பிபாவில் இடம் பெற்றதாக கூறப்படும் ஊழல் தொடர்பான தமது விசாரணைகளில் பிபாவின் தலைவர் செப் பிளட்டர் தவிர்க்கப்படவில்லை என சுவிட்சர்லாந்து தெரிவித்துள்ளது.

2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்படவுள்ள உலக கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவற்கான உரிமை வழங்கப்பட்டதில் ஊழல் இடம்பெற்றதா என்பது தொடர்பான விசாரணைகளை சுவிஸ் முன்னெடுத்துள்ளது.

பிபாவின் கால்பந்தாட்டம் தொடர்பான சந்தேகத்திற்கு இடமான வங்கிக் கணக்குகளை ஆராய்ந்துவருவதாக சுவிட்சர்லாந்தின் சட்டமா அதிபர் மைக்கல் லூபர் தெரிவித்துள்ளார்.

வங்கிக் கணக்குகள் தொடர்பான ஆவணங்களை நிரல்படுத்தி அவற்றை ஆராய்ந்து அதன அடிப்படையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க நீதித் திணைக்களம் மற்றும் பிபாவின் விசாரணை அதிகாரி மைக்கேல் கார்சியாவின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி விசாரணைகளை ஆரம்பித்ததாக அவர் கூறியுள்ளார்.

இதுவரை தாம் மேற்கொண்ட விசாரணையின் முன்னேற்றம் மற்றும் முடிவுகள் குறித்து நம்பிக்கையுடன் உள்ளதாகவும் சுவிட்சர்லாந்தின் பேர்னில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் லூபர் குறிப்பிட்டுள்ளார்.

# குயின்ஸ் கிளப் ரென்னிஸ் வெளியேறினார் நடால்

விம்பிள்டனுக்கு முன்னோட்டமாக லண்டன் குயின்ஸ் கிளப்பில் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் முன்னாள் முதல்நிலை வீரர் ஸ்பெயினின் ரபெல் நடால் முதல் சுற்றிலேயே அதிர்ச்சிகரமாக தோற்றுப்போனார்.

அவரை 79ஆம் நிலை வீரர் அலெக்சாண்டர் டோல்கோபோலவ் (உக்ரைன்) 6-3, 6-7 (6-8), 6-4 என்ற செட் கணக்கில் சாய்த்தார். விம்பிள்டனுக்கு ஒத்திகையாக பெண்களுக்கு இங்கிலாந்தின் பர்மிங்காமில் ஏகான் கிளாகிக் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடக்கிறது.



இதன் 2ஆவது சுற்றில் நடப்பு சம்பியன் செர்பியாவின் இவானோவிச் நேற்றுமுன்தினம் 4-6, 6-3, 6-7 (6) என்ற செட் கணக்கில் மிட்செல் லார்செர் டி பிரிட்டோவிடம் (போர்ச்சுகல்) போராடி வீழ்ந்தார்.

# வடமாகாண சதுரங்கப் போட்டி அருணோதய மாணவிகள் சாதனை

வடமாகாணப் பாடசாலைகளுக் கிடையிலான சதுரங்கப் போட்டியில் அளவெட்டி அருணோதயக்கல்லூரி மாணவிகள் சாதனை படைத்தனர்.

கடந்த 13,14,15ஆம் திகதிகளில் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாகாணச் சதுரங்கப்போட்டியில் அருணோதயக் கல்லூரியின் 19 வயதுப் பெண்கள் அணி சம்பியனாகிச்சாதனை படைத்ததுடன் 15 வயதுப்பெண்கள் அணி 3ஆம் இடத்தினையும் பெற்றது. 19 வயதுப் பெண்கள் அணி தொடர்ச்சியாக 6ஆவது . வருடமாக வலயச்சம்பியன்களாகத் திகழ் கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் அணியின் தலைவியாக செல்வி தே.உமையாழினியும் ,ஏனைய வீராங்கனைகளாக ஸ்ரீ.வேதிகா, க.தனுசியா, இ.நிருசா,ச.நிருசா, ஜெ.வினுசா,நி.பிருந்திகா,ஆகியோரும் உள்ளனர்.

இவ் அணி 5ஆவது தடவையாக தேசியமட்டப் போட்டியில் கலந்து கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ் அணியின் வெற்றிக்கு இவர்களது விடா முயற்சியும் சதுரங்க விளை யாட்டில் உள்ள ஆர்வமுமே காரணமாகும். சதுரங்கத்தில் கோலோச்சும் வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இணையாக யாழில் போட்டியிடும் ஒரே பாடசாலையாக அருணோத யக்கல்லூரி திகழ்கின்றது. இதன் மூலம் இம் மாணவிகள் அரு ணோதயக் கல்லூரிக்கும் வலி காமம் கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இம் முறை வலிகாமம் கல்வி வல யத்தில் உள்ள பாடசாலைகளில் மாகாணப் போட்டியில் வெற்றி பெற்ற ஒரேயொரு பாடசாலை அணியினராக இவர்கள் திகழ் கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் அணியினருக்கு பயிற்றுனராக விஞ்ஞா னபாட ஆசிரியர் அ.சுமந் திரன் பொறுப்பாசிரியராக திரு மதி. எஸ்.பங்கஜவதனி கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. போட்டி முடிவுகள் சம்பியன்கள், 15 வயதுப்பெண்கள் பிரிவு- மெதடிஸ் கல்லூரி, பருத்தித்துறை,15 வயது ஆண்கள் பிரிவு- ஹாட்லிக்கல்லூரி,19 வயதுப் பெண்கள் பிரிவு- அருணோதயக்கல்லூரி,19 வயது ஆண்கள் பிரிவு- ஹாட்லிக்கல்லூரி.




# பாடசாலை மட்ட கிரிக்கெட்

## 17 வயதுப் பிரிவு போட்டியிலும் வென்று அசத்தியது மகாஜன

இலங்கை துடுப்பாட்ட சங்கம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தி வரும் 50 ஓவர் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் இந்துவை ஒரு விக்கெட்டால் வெற்றி கொண்டது

தெல்லிப்பளை மகாஜன. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப் பாய் இந்து முதலில் துடுப்பெடுதாடியது. எனினும் மகாஜன வீரர்களின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்ந்தன.

இதனால் அவ்வணி 33 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களை எடுத்தது. அவ்வணி சார்பாக றகிஸ்கான் - 23, அசோகர் - 36 ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்து வீச்சில் தனுஸ்ரன் 3, சரண்ராஜ்,கனிஸ்ரன், ஜெசிந்தன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.பதிலுக்கு 135 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் மகாஜன அணிக்கு விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்ந்த வண்ணமிருந்தன.

எனினும் கனிஸ்ரனின் ஆட்டமிழக்காத அரைச்சதமும் துலக்ஷனின் பொறுப் பான ஆட்டமும் கை கொடுக்க மகாஜன அணி 29 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக கனிஸ்ரன் ஆட்டமிழக்காமல் 54, துலக்ஷன் 23 ஓட்டங் களைப் பெற்றனர். பந்து வீச்சில் சசிகரன், நிரோஸ்குமார் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(93)

# பாடசாலை மாணவர் மட்ட கராட்டி வேலணை மத்தி மாணவன் 2ஆம் இடம்



பாடசாலை மாணவர்களுக்கு தற்காப்பு கலைகளை ஊக்குவிப்பதற்காக. கல்வித் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் கராட்டி சுற்றுப் போட்டியில் 2015 ஆம் ஆண்டுக்கான வடமாகாண போட்டிகள் வவுனியா சி.சி.ரி.என்.எஸ். பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டம் சார்பாக வேலணை மத்திய கல்லூரி மாண்வனும் கராட்டி பயிற்றுவிப்பாளர் சென்சேய் முருகானந்தனின் சீடனுமான முருகானந்தன் முரளி 17 வயதிற்குட்பட்ட பாட சாலை மாணவர்ளுக்கிடையிலான குமித்தே கராட்டி போட்டியில் பங்குகொண்டு 2 ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

மக்களிடையே அதிகளவு செல்வாக்குச் செலுத்தாத கராட்டி போன்ற தற்காப்புக் கலைகள் பாடசாலை மாணவர்கள் மத்திய ில் தற்போது புத்துயிர் கொடுக்கப்பட்டு வருவதனால் பாரம்பரிய தற்காப்பு கலைகள் இளம் சந்ததியினரிடையே மீண்டும் விரும்பி பயிலும் வகையில் ஒரு உந்துதலை ஏற்படுத்தியுள்ளதுடன பாடசாலை மாணவிகளும் இக் கலைகளை பயில்வதன் மூலம் தமது சுய பாதுகாப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் முடியும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொக்குவில் மத்திய கிண்ணத்தை சுவீகரித்தது திருநெல்வேலி வி. க

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் 2015ஆம் ஆண்டின் வெற்றிக்கிண்ணத்தை முதன் முறையாக கைப்பற்றி சாதனை படைத்தது திருநெல்வேலி விளையாட்டுக் கழகம்.

இறுதிப் போட்டியில் முதல்முறையாக இரு புதிய அணிகளான திருநெல்வேலி விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை ஹாட்லி அணிகள் மோதின. நாண்யற்சுழற்சியில் வென்ற திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பாடியது.

இதன்படி 37.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 255 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் விதுன் அதிரடியாக 81 ஓட்டங்களைக் குவித்தார்,

சுரேஷ் 55 ஓட்டங்களையும், சுரேந்திரன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பருத்தித்துறை ஹாட்லி அணியை சேர்ந்த பிரதீப் 4 விக்கெட்டுக்களையும், நிஷாந் மற் றும் சாகித்யன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 256 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய பருத்தித்துறை ஹாட்லி அணி 37.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோலவியடைந்தது.



அணி சார்பில் தீபன் 30, நிதர் ஷன் 34, நிஷாந்தன் 32 ஓட்டங்க ளைப் பெற்றனர்,

பந்துவீச்சில் திருநெல்வேலி விளையாட்டுக் கழகம் சார்பில் ஜீவிதாசன் 4 விக்கெட்டுக்களையும், கபில் மற்றும் ராஜ் தலா 2 விககெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்படி கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் 2015ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கிண்ணத்தை முதன்முறையாக கைப்பற்றி சாதனை படைத்தது திருநெல்வேலி விளையாட்டுக் கழகம்.

போட்டியின் சிறப்பாட்டக்காரனாக திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்தின் விதுன், சிறந்த துடுப்பாட்டக்காரனாக திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்தின் சுரேஷ், சிறந்த பந்து வீச்சாளராக திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்தின் ஜீவிதாசன் தெரிவானார்கள்.

போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகன் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

(48)





புலோலி வடகிழக்கு உத்திராவத்தை அன்பு மலர் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் முன்பள்ளி ஆசிரியை திருமதி ம. மரியமலர் , புலோலி வடகிழக்கு கிராம சேவை அலுவலர் திருமதி தியாகராசா சாருமதி, புலோலி கிழக்கு மத்திய சனசமூக நிலைய பொருளாளர் ஜெ.கீர்த்தனன்,ஊடகவியலாளர் இ.கிருபாகரசூரியன் ஆகியோர் நிற்பதையும் முன்பள்ளி சிறார்களின் விநோத உடை நிகழ்வையும் காணலாம். (166)

# உள்ளிணக்கம் காணவேண்டிய மீளிணக்கம்

எஸ்.எம்.எம். பஷீர்

இலங்கையின் முன்னைய அரசு 2009 இல் யுத்தம் முடிந்த கையோடு தங்களிடம் சரணடைந்த அல்லது தாங்கள் கைது செய்த சுமார் 12,000 ஆயிரம் புலி இயக்க உறுப்பினர்களுக்கு அவர்களின்



எதிர்கால வாழ்வுக்காக பல் வேறு வகையான தொழிற்பயிற்சிகளையும் அளித்து மீண்டும் சமூகத்துடன் ஒன்றிணையும் வகையில் அவர்களை விடுதலை செய்தது. ஆனால் சென்ற வாரம் காயமுற்ற புலிகளுக்கு அரசாங்க இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரவையில் சில அமைச்சர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மந்திரி சபை அறிக்கையை சம்பிக்க ரணவக்க கடுமையாக எதிர்த்ததன் விளைவாய் அந்த அறிக்கை கைவிடப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்த பொழுது முன்னைய அரசு அவர்களுக்கு சுய தொழில் செய்ய கடனுதவி வழங்கியது. பலருக்கு கல்வியைத் தொடரவும் வழி செய்து கொடுத்தது, தொழில் வாய்ப்பு பெறவும் உதவி அளித்தது. அவையும் ஏதோ ஒரு விதத்தில் இழப்பீடு வழங்குவது போல்தான். அப்பொழுதும் சம்பிக்க ஆட்சியில் இருந்தார், அவரைக் கேட்டு அமைச்சர்கள் அடங்கிப் போகவில்லை. இன்று இவரின் குரலுக்கும், குமுறலுக்கும் வலுவும் சக்தியுமிருக்கிறது, அவர் சுமந்திருக்கின்ற அமைச்சுப்பதவி போல!

அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க புலிப் பயங்கரவாதிகளுக்கு இழப்பீடா என்று குமுறி இருக்கிறார். அந்தக் குமுறலுக்கு பயந்து அந்த அறிக்கையை கொண்டு வந்த அமைச்சர்கள் அடங்கிப் போயிருக்கின்றனர்.

புலிகள் பயங்கரவாதிகள் என்பது பற்றியல்ல கேள்வி. சரணடைந்தவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்களை

முன்னைய அரசில் இவரின் "ஆட்சி" இருந்திருக்குமானால் சரணடைந்த, கைதான புலிகளின் புனர்வாழ்வு விவகாரம் எப்படி இருந்திருக்கும் என்பதை அவரின் இந்தச் செயற்பாட்டின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

இறுதி யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட சரணடைந்த புலிகள் தொடர்பாக முக்கியமாக மூன்று "ஆர்" (அம்சங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. (Rehabilitation, Reintegration and Reconciliation) புனர்வாழ்வு, மீள் ஒருங்கிணைப்பு, மீள் இணக்கம். புனர்வாழ்வு மூலம் மீள் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் இடம் பெற்றிருப்பினும் சமூகங்களுக்கு இடையிலான மீள் இணக்கம் என்பது ஒரு நீண்ட செயற்பாடாகும். ஒரு புறம் அந்தச் செயற்பாட்டினை செய்வதாகக் கூறி, இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானம் 1373 க்கு இயைவாக சென்ற வருடம் கொண்டு வந்த தீர்மானத்தின் மூலம் "அயல் நாட்டு பயங்கரவாத அமைப்புக்கள்" வரிசையில் இடம்பெற்ற, இலண்டனைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழ்ப் பேரவையுடன், அத்தகைய தீர்மானம் அமுலில் இருக்கும் வேளையில், அதனை மீறி மங்கள சமரவீர அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

சென்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை இலண்டனில் சந்தித்து அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கிய சின்னம் சிறு தமிழ்க் குழுவொன்று, அவர்கள் புலம்பெயர் சமூகத்தின் ஏக பிரதிநிதிகளாக படம்போட்டு புளகாங்கிதம் அடைந்து சில மாதங்கள் செல்லவில்லை, ரணிலின் பிரதிநிதி மங்கள சமரவீர, புலிகளின் முகவர் நிறுவனத்துடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடாத்தி உள்ளார். இது வேறு ரணிலின் ஆதரவு சிறு குழுவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளதாக அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. புலம் பெயர் சமூகத்தில் புலி எதிர்ப்பாளர்களான அவர்களின் ஆதங்கமும் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது!

இந்த நிலையில் உலகத் தமிழ் பேரவையுடனான சந்திப்பு ஒரு மீளிணக்க செயற்பாடு என மங்கள காரணம் கூறி உள்ளார். புலம்பெயர் இலங்கையர்களை மீள் வருவதை வரவேற்க இலங்கையில் இவ்வருட இறுதியில் ஒரு உற்சவம் நடத்த இருப்பதாகவும் மங்கள சமரவீர மீள் இணக்க செயற்பாடாக அறிவித்துள்ளார். ஆனால் சம்பிக்க அந்த நிகழ்வு பற்றியும் தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

ஆக மீள் இணக்கம் என்பது மங்களவை பொறுத்தவரை இன்னமும் குணம் மாறாத (புனர்வாழ்வு அளிக்கப் படாத புலம்பெயர்) புலிகளை மாற்றி விடலாம் என்று நம்பிச் செயற்படுகிறார். மற்றவர் அந்த மீளிணக்க செயன்முறைக்கு எதிர்ப்புக் காட்டுகிறார்.

அது குறித்த அவரின் அக்கறை இன்னமும் புலிகள் பயங்கரவாத இயக்கமாக இருக்கும் வரை, வெளி நாட்டு புலி முகவர் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டிருக்கும் வரை சட்டப்படி நியாயமானதே.

ஆனால் புலிகள் அமைப்பில் சேர்ந்து அவயவங்களை இழந்து மற்றும் பல விதத்தில் ஊனமுற்றவர்களுக்கு உதவுவது -இழப்பீடு வழங்குவது என்பது நிச்சயமாக மீளிணக்க செயற்பாடாகும். மனந்திருந்தாத புலம்பெயர் புலிகளை விட அவர்களின் முகவர்களைவிட மனந்திருந்திய புலிகள் தொடர்பில் செய்யப்படும் மனிதாபிமான நடவடிக்கைகள் மீளிணக்கத்துக்கு அவசியமானதாகும்.

புலிகள் அமைப்பில் சேர்ந்து அவயவங்களை இழந்து, செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டு புலிகளின் விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஈடுபடும் பெண்களின் படங்கள் சொல்லும் செய்தி, அவர்களுக்கு உதவுவது என்பது அரசியின் தார்மீக கடமையாகும்!

---

# சின்னச் சின்ன வைத்தியம்



## மாதுளை மகிமை!

மாதுளம் பழச் சாறு அருந்துவதன் மூலம் மன இறுக்கத்தைப் பெருமளவில் குறைக்க முடியும். பல மணி நேரம் தொடர்ந்து உற்சாகமாகப் பணிபுரிய முடியும். இது இதயத்தைப் பலப்படுத்துவதுடன், உயர் இரத்த அழுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைக்கிறது. "மோர்னிங் சிக்னஸ்" எனப்படும் கர்ப்ப காலத்தின் ஆரம்ப் பிரச்சினைகளுக்கு தீர்வு தர, ஆயுர்வேத மருத்துவர்களால் மாதுளை பரிந்துரை செய்யப்படுகிறது. மாதுளையில் துவர்ப்பு தன்மை உள்ளதால், மாதுளை சீதபேதியை கட்டுப் படுத்துகிறது. வயிற்று கடுப்பை நீக்க புளிப்பு மாதுளை சிறந்தது. இனிப்பு மாதுளை இருதயம், மூளை நலனுக்கு ஏற்றது. சமஸ்கிருதத்தில் மாதுளைக்கு "தாடிமம்" என்று பெயர்.

## கண் பிதுங்குதல்!

கர்ப்பமாக இருக்கும் காலத்தில் வேண்டிய அளவுக்கு விற்றமின் "ஏ" சத்துள்ள உணவை சாப்பிட்டு வர வேண்டும். இந்தச் சத்துக் குறைந்து போனால் பிறக்கும் குழந்தையின் கண்களின் விழிகள் பழுப்பு நிறமாக இருக்க வாய்ப்பு உண்டு. அல்லது கண் விழிகள் பிதுங்கி வெளியே வந்து நிற்கும்.

## திராவிட உதடுகள்!

பெண்களுக்கு உதடுகள் கறுப்பாக மாறினால் மலச்சிக்கலுக்கு மருந்து சாப்பிட வேண்டும். மாதம் ஒருமுறை மலச்சிக்கலுக்கு மருந்து சாப்பிட்டு வந்தால் உதடுகளின் நிறம் மாறும். வயிறு சுத்தமாக இல்லை என்பதன் அடையாளம்தான் கறுப்பு உதடுகளுக்கு காரணம்.

## மகத்தான கீரைகள்!

முருங்கை, அகத்தி, பொன்னாங்கண்ணி, சிறுகீரை, அரைக்கீரை, வல்லாரை, தூதுவளை துத்தி, மணத்தக்காளி, கொத்துமல்லிக் கீரை ஆகியவை நீரிழிவைக் கட்டுப்படுத்தும் மகத்தான கீரைகளாகும். மிளகு, சீரகம், பூண்டு, வெங்காயம், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து சூப் செய்து பருக நல்ல பலன் கிடைக்கும்.

## மலச்சிக்கலுக்கு...

நீரிழிவு நோயாளிகள் பீன்ஸை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் நோய் பாதிப்புகள் குறையும். செரிமான சக்தியை அதிகரிக்கும். வாயுத் தொல்லையை நீக்கும். இதில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலைப் போக்கும்.

## உடல் அசதியா?

ஒரு வாளி வெந்நீரில் கால்களை சிறிது நேரம் வைத்துக் கொண்டால், கால் வலி மட்டும் குறையாது. அதில் சிறிதளவு உப்பைத் சேர்த்துக் கால்களை வைத்தால் பித்த வெடிப்பும் மறைகிறது. ரத்த அழுத்தத்தினால் ஏற்படும் தலைவலி குறைவதுடன் உடல் அசதியும் குறைந்து புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

## குணம் பெறுக!

இருமல், எலும்புருக்கி, மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்குதல், பலவீனம் ஆகியவற்றுக்கு, ஏலம், லவங்கம், மிளகு, சுக்கு, திப்பிலி, சிறு நாவல் பூ ஆகியவற்றை மருந்தாகத் தயாரித்து, உண்டால் நன்கு குணம் பெறும்.

## வேப்பிலை அருமை!

அன்ட்டிசெப்டிக் எனும் தற்காப்பு மருந்துக்குப் பதிலாக வேப்பிலைச் சாற்றில் தயாரிக்கப்பட்ட திரவத்தைப் பயன்படுத்திப் பார்த்ததில் அது மிகவும் பாதுகாப்பானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

## தீக்காயத் தழும்பு போக...

கற்றாழையில் உள்ள ஜெல்லானது மிகவும் சிறந்த ஒரு பொருள். அந்த ஜெல்லை தழும்புகள் உள்ள இடத்தில் தொடர்ந்து தடவி வந்தால், தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உள்ள தழும்பானது மறைய ஆரம்பிக்கும். அதுமட்டுமன்றி, சருமமும் மென்மையாகும்.

## இயற்கை 'இன்ஹேலர்'

கடுஞ்சளியால் மூச்சுத்திணறல் ஏற்பட்டால் ஒரு மெல்லிய துணியில் ஓமத்தை முடிந்து நன்கு நுகர்ந்து வர கடுஞ்சளி குணமாகி மூச்சுவிடுதல் இயல்பாகும். இதை ஒரு இயற்கை "இன்ஹேலர்" என்று சொல்லலாம்.

## அதிகமாகச் சாப்பிட்டுவிட்டால்...

சிறிதளவு புதினா இலைகள், ஒரு சிறிய துண்டு இஞ்சி, சிறிதளவு பெருங்காயம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, புதினாவையும், இஞ்சியையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பெருங்காயம் சேர்த்து ஒரு டம்ளர் மோரில் போட்டு குடித்து விடவும். இவ்வாறு செய்தால் இது செரிமானத்தைத் தூண்டி வயிற்றைச் சரிப்படுத்திவிடும்.

# கீவ்கென்ஹாப் துலிப் தோட்டம்!

உலகிலேயே மிகச்சிறந்த பூந்தோட்டம் துபாயில் உள்ள "மிராக்கள்" தோட்டம். இதற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தோட்டம், நெதர்லாந்தின் "கீவ்கென்ஹாப்" ஆகும்.

ஆம்ஸ்ரடோம் நகருக்கு தென் மேற்கே லிசி என்ற இடத்திற்கு அருகில் துலிப் தோட்டம்



அமைந்துள்ளது. இந்த ஊருக்கு சென்று வர பேருந்து மற்றும் ரயில் வசதி உண்டு.

டகோடா விமானம் கூட, உங்களை ஆம்ஸ்ரடோம் விமான நிலையத்திலிருந்து அழைத்துப்போய், இந்த வண்ணமயமான தோட்டத்தை விண்ணிலிருந்தே காட்டிவிட்டு திரும்ப வரும்.

வசந்த காலத்தில் 70 இலட்சம் மக்கள் இந்தப் பூ கண்காட்சியைப் பார்த்து மகிழ்கிறார்கள். இந்த ஆண்டின் சிறப்பு அம்சம். பிரபல ஓவியர் வான்கோக்கின் 125ஆவது நினைவு தினம் சார்பாக, அவரையே பூக்களால் வடிவமைத்து உள்ளனர். நீங்கள் அடுத்த ஆண்டில் இங்கு போவதாக இருந்தால், அவர்களுக்கு முன் கூட்டியே தெரிவித்தால் உங்கள் உருவத்தை ஒரு பகுதியில் பூக்களால் உருவாக்குவார்கள். இதற்கு கட்டணம் உண்டு. டச் பணக்காரர்களில் சிலர் இதனை செய்யச் சொல்லி பார்த்து மகிழ்வது உண்டு.

இந்தத் தோட்டம் மார்ச் மாதத்தின் நடுவிலிருந்து மே மாதம் முதல் பாதி நாட்கள் வரை காட்சிக்காகத் திறந்திருக்கும். ஏப்ரல் மாதத்திற்குள் பார்த்துவிடுவது நல்லது. ஏப்ரல் - 25ஆம் திகதி, ஒரு அணிவகுப்பு, "பூ ஊர்வலம்" என்ற பெயரில் 40 கி.மீ தொலைவுக்கு நடக்கும்.

இதனைப் பார்க்க பெரும்கூட்டம் கூடும்.

உலகிலேயே பூக்கள் விற்பனையில் முதலிடம் வகிப்பது நெதர்லாந்துதான். இதனால் "ஐரோப்பாவின் தோட்டம்" என்று நெதர்லாந்துக்குச் செல்லப் பெயர் உண்டு.

நெதர்லாந்துக்கு துலிப் மலர் வந்தது எப்படி? கஜகஸ்தானின் மலைப் பகுதியில் இருந்த ஒரு துலிப் மலருக்கு அங்கு இருக்க விருப்பமில்லாமல், பெர்சியா, சீனா, துருக்கி என அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது, அதனை நெதர்லாந்தின் விஞ்ஞானி ஒருவர் பார்த்து எடுத்து வந்து பல்கலைக் கழக தோட்டத்தில் பயிரிட்டாராம். இந்த சீதோஷ்ண நிலையும் ஊரும், துலிப் மலருக்கு மிகவும் பிடித்து விட்டதாம். இதனால் துலிப்மலர் பல மடங்கு பெருகியதாம்.

இதனால் துலிப்பே, நெதர்லாந்தின் சின்னமாக இன்று மாறிவிட்டது.

"கீவ் கென்ஹாப்" என்றால் சமையலறையைச் சார்ந்த தோட்டம் என்பதே பொருள்.

இந்த தோட்டத்தில் பல உள்தோட்டங்கள் உண்டு. அவை இங்கிலீஷ் தோட்டம், சரித்திரம் சார்ந்த தோட்டம், இயற்கை தோட்டம், ஜப்பான் பாணி தோட்டம் எனப்பல உண்டு.

பூங்காவனத்தில் அமைந்துள்ள பாதைகள் நேராகச் செல்லாமல் வளைந்து வள்ளந்து, ஏறி இறங்கி, சுற்றி ரசித்து செல்லும்படி அமைந்திருக்கும். இந்த சுற்றுப்பாதையின் நீளம் 15 கிமீ. நடந்தும் ரசிக்கலாம். அல்லது சைக்கிளும் வாடகைக்கு கிடைக்கும்.

நீண்டதூரம் உள்ள ஒரே வண்ண துலிப் பூ தோட்டத்தை பார்க்க தனியார் தோட்டங்களுக்குச் செல்ல வேண்டும்.

இந்தத் தோட்டத்தை சுற்றிப் பார்க்க பெரியவர்களுக்கு 14 டொலரும், 5 வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கு 7 டொலரும் கட்டணமாக வசூலிக்கின்றனர்.

உள்ளுக்குள்ளேயே சிற்றாறுகள், குளங்கள், உள் செடி வளர்ப்பு இல்லங்கள் வளைவு வளைவு பாதைகள் என எல்லாம் உண்டு. இனிமையான மணம் கொண்ட மலர்ச் செடிகளும் உண்டு.

# ஸ்ரீவித்யாவின் உயில்!

மலையாள மற்றும் தமிழ்த் திரையுலகில் எண்பதுகளில் தனது நடிப்பாலும், அழகாலும், அகலக் கண்களாலும் நம்பர் வன் நடிகையாகக் கொடி கட்டிப் பறந்த ஸ்ரீவித்யா, முதுகுத் தண்டில் புற்று நோய் வந்து 2006 இல் திருவனந்தபுரத்தில் சொந்த வீட்டில் இறந்து போனார். இன்று மீண்டும் அவர் கேரளப் பத்திரிகைகளில் பரபரப்புச் செய்தியாக அடிபடுகிறார். காரணம், இறப்பதற்கு முன்பு ஸ்ரீவித்யா எழுதி வைத்த உயில்.

இறக்கப் போகிறோம் என்று உறுதியானதும், தனது சொத்துக்களை விற்று ஓர் அறக்கட்டளை தொடங்கி, நடனம், இசை பயில விரும்பும் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியருக்கு உதவ, நிதி உதவிகள் செய்ய வேண்டும் என்று உயில் எழுதி, தனது நண்பராக இருந்த நடிகரும், கேரள முன்னாள் அமைச்சருமான கணேஷ்குமாரை பாதுகாவலராகவும் நியமித்தார். அதே உயிலில், தனது சகோதரரின் பிள்ளைகள் இருவருக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் தரப்படவேண்டும் என்றும் ஸ்ரீவித்யா எழுதி வைத்தார்.

இதில் முக்கிய திருப்பம் என்னவென்றால், ஸ்ரீவித்யா எழுதிய உயிலின்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான். ஸ்ரீவித்யாவின் சகோதரரின் மகன்கள் இருவருக்கு தரப்பட வேண்டிய 10 இலட்சமும் தரப்படவில்லை. நடிகை ஸ்ரீவித்யாவின் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவதாக ஸ்ரீவித்யாவின் சகோதரர் சங்கர் ராமன் புகார் கொடுத்துள்ளார்.

கணேஷ் குமார், ஸ்ரீவித்யாவின் சொத்துக்களை கேரள மாநில திரைப்பட அகடமிக்கு மாற்ற கேரள அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில், கேரள அரசின் சார்பில், ஸ்ரீவித்யாவின் சொத்துக்களை அரசு எடுத்துக் கொள்ள முடியாது. ஸ்ரீவித்யாவின் நெருங்கிய உறவினருக்குத்தான் தரப்படவேண்டும் என்று நீதிமன்றம் சொல்லியுள்ளது.

கணேஷ் குமார் அரசியலிலும் பல சலசலப்புகளை உருவாக்கியவர் உருவாக்கிக் கொண்டு இருப்பவர். நல்ல பண பலம் உள்ளவர். சட்டசபை தேர்தலில், ஒரே தொகுதியில் மூன்றுமுறை தொடர்ந்து வெற்றி பெற்றவர்.

நடிகை ஸ்ரீவித்யாவின் சொத்துக்கள் என்ன ஆகும்? யாருக்குப் போய்ச் சேரும்? என்பதுதான் கேரளத்தின் இன்றைய பரபரப்புச் செய்திகளில் முன்னணியில் நிற்கிறது.



# ஊரும் உலகமும்

## இலங்கை எம்.பியாக ஆங்கிலேய பெண்மணி



இலங்கையின் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தன் மூலம் வரலாறு படைத்தார் ஒரு ஆங்கிலேய பெண்மணி. அவர் டொறீன் விக்கிரமசிங்ஹ.

டொறீன் வினிபிறெட் யங் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த ஆங்கிலேயப் பெண். பல சமதர்மவாதிகளை உருவாக்கிய லண்டன் ஸ்கூல் ஒவ் எகனமிக்ஸ் டொறீன் யங்கையும் சமதர்மவாதி ஆக்கியது. பி.எஸ்.சி. பட்டத்துடன் இலங்கைக்கு வந்து ஆசிரியத் தொழில் புரிந்த டொர்றீன் யங் இங்கிலாந்தில் தனக்குப் பழக்கமானவரான டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹவை 1932 ஏப்ரல் 26ஆம் திகதி பதிவுத்திருமணம் செய்தார். அக்காலத்தில் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். பின்னர் அக்கட்சியிலிருந்து வெளியேறி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தது வரலாறு. டொறீன் விக்கிரமசிங்ஹ தனது கணவனின் அரசியல் நடவடிக்கைகளுக்கு எப்போதும் உறுதுணையாக இருந்தார்.

1952ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட டொறீன் 16626 வாக்குகள் பெற்று 1001 மேலதிக வாக்குகளால் அக்குரஸ்ஸ தொகுதியின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹவுக்கு மைத்துனரான சரத் விஜேசிங்ஹ.

## நேருவின் மனமாற்றம்



சுதந்திரத்துக்கு முந்திய இந்திய தேசிய காங்கிரஸில் மகாத்மா காந்தியின் வாரிசாக நேரு கருதப்பட்டார். ஆனால் காந்திக்கும் நேருவுக்குமிடையே ஆழமான கருத்து வேறுபாடு நிலவியது. இந்தியாவுக்கு முதலில் டொமினியன் அந்தஸ்தா அல்லது பூரண சுதந்திரமா என்பதில் இருவரும் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். காந்தி, ராஜேந்திர பிரசாத், மோதிலால் நேரு போன்றவர்கள் முதலில் டொமினியன் அந்தஸ்தைக் கோருவதே புத்திசாலித்தனமானது எனக் கூறினர். நேரு பூரண சுதந்திரம் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

1927 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் நேரு பூரண சுதந்திரம் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார். அந்த மகாநாட்டில் காந்தி பங்குபற்றவில்லை இத்தீர்மானத்தைத் தொடர்ந்து இருவருக்குமிடையே முரண்பாடு அதிகரித்த நிலையில் நேரு இந்திய சுதந்திரத்துக்கான லீக் என்ற அமைப்பை ஆரம்பித்தார்.

1928 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற கல்கத்தா மகாநாட்டுக் காலகட்டத்தில் மூத்த தலைவர்களின் அழுத்தத்துக்குப் பணிந்த நேரு டொமினியன் அந்தஸ்துக்கான எதிர்ப்பைக் கைவிட்டார். பூரண சுதந்திரம் என்ற நிலைப்பாட்டில் காங்கிரஸ் உறுதியாக நிற்க வேண்டும் என்று இந்த மகாநாட்டில் சுபாஷ் சந்திரபோஸ் கொண்டு வந்த தீர்மானம் ஆதரவாக 973 வாக்குகளும் எதிராக 1350 வாக்குகளும் பெற்றுத் தோல்வியடைந்தது. 48 பேர் நடுநிலை வகித்தனர். அவர்களுள் நேருவும் ஒருவர். இந்த மகாநாட்டுக்குப் பின் நேருவின் இந்திய சுதந்திரத்துக்கான லீக் இயற்கை மரணமெய்தியது.

## உள்நாட்டு மோதல்களே

1989 இற்கும் 1997 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடப்பட்ட 86 மோதல்களில் மூன்று மாத்திரம் நாடுகளுக்கு இடையிலான ஆயுதப் போர்கள். மற்றைய அனைத்தும் இன மற்றும் சமூக முரண்பாடுகள் காரணமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தங்கள்.

# தொன்மையும் சிறப்பும் மிக்க வளம் கொழிக்கும் புனித கிராமம் உடுவில்




இலங்கையின் வடக்கே யாழ். மாவட்டத்தில் வலிகாமம் பகுதியில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு கிராமம். இது நான்கு புறமும் நெல் வ்யல்களும், மரக்கறி விளை நிலங்களும் சூழ்ந்துள்ள கிராமம் யாழ். நகருக்கு வடக்கே சுமார் 8 கிலோ மீற்றரகள் தொலைவில் அமைந் துள்ளது. சுன்னாகம், கந்தரோடை, சங்குவேலி, மானிப்பாய், சுதுமலை, இணுவில் என்னும் ஊர்கள் உடுவிலின் எல்லைக ளாக அமைந்துள்ளன.

யாழ்.நகரில் இருந்து வடக்கு நோக்கி உடுவிலைத் தொட்டுச் செல்லும் காங்கேசன்துறை வீதியும், மருதனார் மடம் சந்தியிலிருந்து, மேற்கு நோக்கி உடுவிலை ஊடறுத்துச் செல் லும் கைதடி - மானிப்பாய் வீதியும் உடுவில் ஊடான பிரதான போக்கு வரத்து மார்க்கங்களாகும். . இங்கு இந்துக்களும், கிறித்தவர்களும் ஒருங்கே வாழ்ந்து வருகின்றார்கள். கிறிஸ்தவர்களில் கத்தோலிக்க மதத்தை பின்பற்றுபவர்கள் அதிகமானாலும் புரட்டஸ்தாந்து மதத்தையும் பிற்காலங் களில் தோன்றிய ஏனைய கிறித்தவ மதப் பிரிவுகளைப் பின்பற்றுப வர்களும் வாழ்கின்றார்கள்.

**தொழில்கள்**

இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயமாகவே விளங்கி வருகின்றது. ஆயினும் கல்வியறிவு வளர்ச்சியாலும், மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற விளைந்தமையா லும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினா லும் தற்போதைய இளம் சந்ததியினர் அரசாங்க மற்றும் தனியார் தொழில் களை பெரும்பாலும் நாடிச் செல்கின் றனர். பலர் புதிய வியாபார, வணிக முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தியுள் ளனர். இவற்றினை விட பரம்பரை பரம்பரையாக குறிப்பிட்ட சில தொழில் களில் ஈடுபட்டு வந்தவர்கள், சிலர் வேறு தொழில்களை நாடிச் செல்ல மீற்றயவர் கள் தம் பரம்பரை தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

**உடுவில் கிராமமானது 5 கிராம அலுவலர் பிரிவுகளை கொண் டுள்ளது. அவையாவன**

J/182 உடுவில் தென் மேற்கு
J/183 உடுவில் தென் கிழக்கு
J/184 உடுவில் மத்தி
J/185 உடுவில் வட மத்தி
J/186 உடுவில் வடக்கு

**உடுவிலில் அமைந்துள்ள பாடசாலைகள்**

உடுவில் மகளிர் கல்லூரி (தரம் 1 முதல் உயர்தரம் வரை) அமெரிக்க மிஷனால் நிறுவப்பட்ட பெண்கள் பாடசாலை. யாழ்ப்பாணத்தின் பிர பலமான பாடசாலைகளுள் ஒன்று. பெண்கள் தங்கிப் படிப்பதற்காக அமைக்கப்பட்ட இது, இவ்வகையில் தெற்காசியாவிலேயே முதலாவது எனக் கூறப்படுகின்றது. இதற்கென ஒரு நீண்ட தனி வரலாறும் கல்விப் பாரம் பரியமும் இருக்கின்றது.

உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை (தரம் 1-5 வரை)

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை (தரம் 1-5 வரை)

உடுவில் மான்ஸ் மகா வித்தியா லயம் (தரம் 1-11 வரை)

உடுவில் முருகமூர்த்தி வித்தியா லயம் (தரம் 1-11 வரை)

உடுவில் மல்வத்தை ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை (தரம் 1-5 வரை)

புதுமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை (தரம் 1-5 வரை)

**முக்கியமானவை பொது அமைப்புக்கள்**

உடுவில் பிரதேச செயலகம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமைச் செயலகம்

உடுவில் பொதுசன நூலகம்

உடுவில் துணை பொதுசன நூலகம் - மருதனார்மடம்

மருதனார்மடம் வேளாண் சந்தை

வாழ்வகம்-விழிப்புலன் வலுவிழந் தோர் காப்பகம் தனியார் அமைப்பு

கேன் (CANE) வடக்கு கிழக்கு புற்று நோய் உதவி - புற்றுநோயாளர் காப்ப கம் தனியார் அமைப்பு

அரசினர் ஆரம்ப சுகாதார பராம ரிப்புப் பிரிவு (Primary Medical Care Unit)

The ARK - மன நலம் குன்றிய சிறுவர் காப்பகம்

ஜசுபி (JACHUFI) பழச்சாறு மற்றும் பான உற்பத்தித் தொழிற்சாலை என்பன குறிப்பிடத்தக்கது.

— — — — —

**உடுவில் அரவிந்தன்**
**ஈழத்து எழுத்தாளர்**



உடுவில் மகளிர் கல்லூரி அதிபராக திருமதி சிரானி மில்ஸ் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்டபோது





190 ஆவது ஆண்டுவிழாவை ஒட்டி இடம்பெற்ற மகளிர் நடைபவனி போட்டியில் தெற்காசியாவில் முதலாவது பெண்கள் பாடசாலை

## உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில்





உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர் சுவாமி ஆலயம் ஆனது ஏறக்குறைய தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் உடுவில் கிராமத்தில் காட்டுவயல் அல்லது வேம்படிவயல் என அழைக்கப்பட்ட வயற்பரப்பிலே அல்லிக்கிழங்கு அகழ்ந்தெடுப்பதற்காக வயலை உழுத போது கலப்பை ஒரு பெரிய கல்லிலே பட்டபோது அதிலிருந்து உதிரம் பெருகியதால் உழவு செய்தவர் மயக்கமடைந்தார். அப்போது நான் கண்ணகை அம்மன். என்னை எடுத்து வழிபாடு செய் என ஓர் அசரீரி ஒலித்தது. அப்போது அவர் மயக்கம் தெளிந்து அச்சிலையை எடுக்க அது பெரிய முண்டாகிருதியாகக் காணப்பட்டதால் அந்த இடத்திலேயே அதை வைத்து சிறு கோவில் கட்டி வழிபாடு செய்து வந்தனர்.

கண்ணகை அம்மன் வந்து தங்கிய இடங்களைக் குறிப்பிடும் பாடலில் அங்கணாக் கடவை முதல் உடுவில் உட்பட பல ஊர்கள் உள்ளமை இவ்வாலயத்தின் பழமையை புலப்படுத்துகின்றது.

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் கும்பகோணத்திலிருந்து வந்த இராமர் என்ற அந்தணரால் இத்தலத்தில் மீனாட்சி அம்மன் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டது.

இவரது வழித்தோன்றல்களால் பராமரிக்கப் பட்டுவரும் இக்கோவிலில் ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சோமசுந்தரப் பெருமானுக்குக் கோவில் அமைக்கப்பட்டது.

தொடர்ந்து பரிவார மூர்த்திகள், வசந்த மண்டபம், யாகசாலை, திருமஞ்சனக்கிணறு, மடைப்பள்ளி ஆகியவை அமைக்கப்பட்டன.

# சிரமதானப் பணிகளில் பங்கெடுத்து நிதியையும் வழங்கவேண்டிய நிலை

## விசனமடையும் பொதுமக்கள்

(கரவெட்டி)

வீதி சிரமதானப் பணிகளிலும் பங்கெடுத்து இதற்காக நிதி உதவிகளையும் வழங்குவதில் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக வடமராட்சி தெற்கு, மேற்கு பகுதி வாழ் மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ்வரும் வீதி அபிவிருத்திப்பணிகளிலேயே நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிராமசேவகர் பிரிவுகளுக்கான ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் முதற்கட்டமாக வழங்கப்பட்ட 5 இலட்சம் ரூபாவில் தற்சமயம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் கூடுதலாக வீதி அபிவிருத்திப்பணிகள் அங்குள்ள கிராமங்களில் செயற்பாட்டில் இருக்கும் உள்ளூரமைப்புகளின் பிரதிநிதிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சிரமதான அபிவிருத்திப் பணிகளில் சிலர் பங்கெடுக்கின்றபோதும் மேலதிகமாக எம்மிடம் பண உதவிகளை எதிர்பார்ப்பது சிரமமான ஒன்றாக இருப்பதாக அப்பணிகளில் ஈடுபடும் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

அன்றாட வாழ்க்கையைச் சமாளிக்க நிரந்தரமற்ற கூலி வேலைகளை எதிர்பார்த்திருக்கும் எம்மிடம் பொது அபிவிருத்திக்காக பணத்தையும் கோருவது சிரமத்துக்குள் தள்ளியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (18)

# "எல்லைகளைத் தாண்டி" கலை நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

சுனேரா நிறுவனமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து உடுவில் ஆர்க் (ARK) மாற்று ஆற்றல் கொண்ட பிள்ளைகளும் அனுராதபுரம் சுனேரா நிறுவன பிள்ளைகளும் ஒன்றாக இணைந்து முப்பது ஆண்டுகால இன உறவின் முறிவுகளையும் அதனால் ஏற்பட்ட இடைவெளியினையும் கலை என்ற ஊடகத்தால் இனம், மதம், சாதி, சமயம், கலை, கலாசாரம் கடந்து சகோதரமான உணர்வுடன் கலைப் பயிற்சியின் ஊடாக உருவான உடல் மொழியால் உணர்வுகளை வெளிப்படுத்தி "உன்னால் முடியும் என்பது எம்மாலும் முடியும் என்பதை மாற்று ஆற்றல் கொண்ட பிள்ளைகள் தமது உடல் மொழியால் நிரூபித்துக் காண்பிக்கின்றனர்.

"எல்லைகளைத்தாண்டி" என்னும் கலை நிகழ்வினூடாக உடுவில் ஆர்க்.அனுராதபுரம் சுனேரா நிறுவனப்பிள்ளைகளும் ஆர்க் பாடசாலையில் இணைந்து மூன்று வாரப்பயிற்சியின் நிறைவாக இன்று வெள்ளிக்கிழமை பி.ப.4 மணிக்கு யாழ்.திருமறைக்கலாமன்ற பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் அரங்கேற்றுகின்றனர். இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில் நந்தனன் பிரதமவிருந்தினராக பங்கு கொள்கின்றார். இந்நிகழ்வினை சுனேரா இணைப்பாளர் கலாபூசணம் ஜி.பி.பேர்மினஸ் நெறிப்படுத்துகின்றார்.

இதன்தொடர்ச்சியாக உடுவில் ஆர்க் பிள்ளைகள் சுனேரா நிறுவன அனுராதபுரபிள்ளைகளுடன் அனுராதபுரத்தில் இணைந்து மூன்று வாரம் அங்கும் பயிற்சி பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறுதி நிகழ்வினை அரங்கேற்ற உள்ளனர். இந்நிகழ்விற்கு உடுவில் ஆர்க் அருட்சசோதரிகளின் பங்களிப்பும் அர்ப்பணமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொண்டராசிரியர்களுக்கு இன்று கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள எடிசன் கல்லூரியில் கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர் சங்கத்தலைவர் இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறும்

இக் கலந்துரையாடல் கடந்த 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தொடர்ச்சியாக தெண்டராசிரியர்களாக கடமையாற் றிக் கொண்டிருப்பவர்களை மாத்திரம் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.




# "பெண்ணிற் பெருந்தக்க யாவுல"

முன்னொரு காலத்தில்தேவரதன் என்பவனுக்கு அன்புள்ள மனைவி இருந்தாள். அவள் பெயர் சிரோமணி கற்பு நெறி பிறழாதவள். சிரோமணியின் அழகைப்பற்றி கேள்வியுற்ற அரக்கன் ஒருவன் அவளை அவனது கணவனைப் போல் வழவம் எடுத்துக் கொண்டு வந்து அபகரித்துக் கொண்டு சென்று விட்டான். அவ்வாறு அபகரித்துப் போன அந்த அரக்கன் சிரோமணியை ஒரு குளக் கரையில் இறக்கி வைத்து விட்டு தன் சுய வழவத்தை எடுத்துக் கொண்டு அவளை பல வழிகளிலும் பலவந்தப்படுத்தினான்.

கற்புக்கரசியான சிரோமணி அரக்கனுக்கு இணங்காமல் தன் கற்பைக் காக்க தனது சக்தி அனைத்தையும் திரட்டிப் போராடிக் கொண்டிருந்தாள். ஆதனால் கோபம் கொண்ட அரக்கன் கத்தியை எடுத்துக் கொண்டு பயமுறுத்தினான். அரக்கனின் மிரட்டலுக்கு அவள் அஞ்சவில்லை.

சிரோமணிக்கு உதவத் துடிப்பது போல் குளத்தில் மீன்கள் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தன. வானமும் குமுறிக் கொண்டிருந்தன.

மனித நடமாட்டம் இல்லாத அந்த இடத்தில் தன்னந்தனியாக அரக்கனோடு போராட்டம் நடந்தது. அபலை சிரோமணியின் உடல் சோர்ந்து விடத் தொடங்கியது.

தர்மத்திற்கு சோதனை ஏற்படும் காலத்தில் குமுறும் நல்லோர் நெஞ்சம் போல் குமுறிக் கொண்டிருந்த வானத்தை அவள் நிமிர்ந்து பார்த்தாள். பார்க்கும் இடம் தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் வானமே பரமனின் வடிவமாக அவளுக்குத் தோன்றியது. வானத்தை நோக்கி இரு கரங்களையும் குவித்துக் கண்களில் நீர்மல்கச் சிரோமணி அரற்றினாள். "நான் உண்மையில் பதிவிரதையாயின், எனது நடத்தையால் சான்றோர் மகிழ்ச்சி அடைந்திருப்பீர்களாயின், எனது உடலின் தலை நீங்கலாக மற்றப் பகுதி முழுவதும் கல்லாக மாறட்டும்;" என்று கதறினாள். அவளது உடலால் தலை நீங்கலான இதர பகுதி கல்லாக மாறிவிட்டது.

தனது விருப்பம் நிறைவேறாததைக் கண்ட அரக்கன் சிரோமணியின் தலையை வாளினால் துண்டித்து விட்டான்.

இதன் விளைவாக பூலோக வாழ்வு முடிந்த சிரோமணி வானவர் மலர் தூவத் தேவலோகம் சென்றாள். ஜகன் மாதாவான பார்வதிதேவிக்கு நகமும் சதையும் போல் நெருங்கிய தோழியாகும் பேறு பெற்றாள்.

இந்த வரலாறு மகாபாரத்தில் விராடப்பருவத்தில் காணப்படுகின்றது. கற்புள்ள மாதரினால் முடியாதது ஒன்றில்லை என்பதை மூர்க்கர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

ஜே.கே.பெற்ற ஞானபீட விருது குறித்து ஒருவர் தனது இதழில், "ஜெயகாந்தன் இறந்து பல ஆண்டுகளாகிவிட்டன. இது அவரது சடலத்துக்குச் செய்யும் சடங்கு" என்ற பாணியில் எழுதியிருந்தார். இது குறித்து ஜே.கே.யின் "சபை'யில் அவர் அளித்த பதில்வினையில் பெருந்தன்மையும், ஆன்மிக லயத்தையும் பார்க்கலாம்:

"இறந்து வாழ்தல் ஒரு சுவாரஸ்யமான அனுபவம். எழுதிக் கொண்டே இருப்பதை விட எழுதுவதை நிறுத்தி, அதன் வாசிப்புகளையும் தாக்கங்களையும் கண்டு அசை போடுவதில் சுகம் இருக்கிறது. பேசிக் கொண்டிருப்பதைவிட பேசுவதை நிறுத்திவிட்டு, நமது சொற்களின், எண்ணங்களின் சலனங்களையும் எதிரலைகளையும் தரிசித்தல் அர்த்தமுள்ளது. இதை உணர்ந்துதான் விருது அளித்தார்களோ? இறந்து வாழ்வதற்கான விருதுதானோ இது?"

ஜே.கே. "சபை'யில் பகிர்ந்து கொண்ட இன்னொரு கருத்து:

"சூரியன் தினமும் சாகிறானா? அது ஒரு மாயை. மனிதன் செத்துக் கொண்டே இருக்கிறானா? அதுவும் ஒரு மாயை தான். மனிதன் பிறந்து கொண்டேயும் இருக்கிறான். மனித குலம் வாழ்ந்து கொண்டே இருக்கிறது. அதுவே சத்தியம்."

**– டாக்டர் கே.எஸ்.சுப்பிரமணியன்**

'அவர் தொட்ட எதனையும் அணி பெறாமல் செய்ததில்லை' என்று ஒலிவர் கோல்ட் ஸ்மித்தைப் பற்றி அவர் இறந்த போது கூறினார் ஸாமுவேல் ஜோன்ஸன். இது சுஜாதாவுக்கு முற்றிலும் பொருந்தும். சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள், கேள்வி, பதில்கள் என்று அடுக்கிக் கொண்டே இவற்றை அணிபெறச் செய்தது, அவருடைய தமிழ் நடை. தமிழ் மொழிச் சொற்களின் அர்த்த எல்லைகளை விரிவாக்கிய தற்காலத்து எழுத்தாளர்களிலே முதன்மையான வர் சுஜாதா.

ஒரு விஞ்ஞானிக்கு இலக்கியத்தில் ஈடுபாடு ஏற்பட்டால், அதனால் இலக்கியத்துக்கு எவ்வளவு பெரிய லாபம் என்பதற்கு சுஜாதாவின் கட்டுரைகளும், படைப்பாக்கங்களுமே சான்று. குறுகத்தறித்த நடையில் ஒரு பிரபஞ்சத்தை உள்ளடக்கிச் சொல்லும் ஆற்றல், ஒரு விஞ்ஞான இலக்கியவாதியால்தான் முடியும்.

புறநானூற்றில் ஒரு விஞ்ஞானி [வான்கோள் ஆய்வாளன்] ஒரேயொரு கவிதைதான் எழுதியிருக்கிறான். அக்கவிதையின் பொருள் ஆழத்தாலும், சொற் சிக்கனத்தாலும், பரவலாக அறியப்படுகிறது. கவிஞன் பேர், கணியன் பூங்குன்றன்.

கவிதையின் முதல் வரி: 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'.

**– இந்திரா பார்த்தசாரதி**

அசோகமித்திரன் கடந்த 64 வருட காலமாக தமிழில் எழுதி வந்திருக்கிறார், அதில் 43 வருடங்கள் முழு நேர எழுத்தாளராகவே வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்.

வேறு வேலை எதுவும் தேடவில்லையா என்ற கேள்விக்கு, "யாரும் தரவில்லை. எனக்கும் கேட்கத் தெரியவில்லை என்று கூற வேண்டும். ஒரு முறை முனைந்து ஒருவரிடம் சென்றேன். எல்லாம் நம் சாவிதான். அப்போது தான் 'தினமணி கதிர்' பொறுப்பேற்றிருந்தார். 'வா வந்து சேர்' என்றார்.

'கணையாழி என்று டில்லியில் இருப்பவர் நடத்தும் பத்திரிகை ஒன்று இருக்கிறது, அதை நான்தான் பார்த்துக் கொள்கிறேன். எனக்கு அதில் வருவது மாதம் ஐம்பது, நூறு தான் என்றாலும் என்னையே நம்பியிருக்கிறார்கள். நான் அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும். அது எந்த விதத்திலும் கதிரின் பாதையில் குறுக்கிடாது' என்றேன்.

சாவியால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

ஆனால் சில ஆண்டுகளுக்குள் கணையாழியின் உரிமையாளரே, தினமணி நிறுவனத்தில் சேர்ந்து பணி செய்து வந்தது வாழ்க்கையின் Dramatic irony என்று தான் கூற வேண்டும்." என்கிறார்.


சுஜாதா காலமான போது, அஞ்சலி செலுத்த அசோகமித்திரன் வந்திருந்தார். மத்தியான வேளையில் சென்னை வெயிலுக்குக் களைத்துப் போயிருந்தார். வீட்டுக்கு கிளம்பியவர், முடியாமல் மயக்கத்தில் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டார். உடனே சிலர் அவருக்கு தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தார்கள். கொடுத்தவர்களுக்கு நிச்சயம் அவர் அசோகமித்திரன் என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தண்ணீர் அருந்திவிட்டு சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "வேளச்சேரிக்கு போகணும், பஸ்டாண்ட் வரை யாராவது கொண்டு விட முடியுமா?" என்று கூட்டத்தைப் பார்த்து கேட்டதை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

**– சுஜாதா தேசிகன்**

# திருமலை, முல்லை, வவுனியாவில் சிறுநீரக நோய் அதிகரிப்பு

(கொழும்பு)

திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் சிறுநீரக தொகுதி கோளாறு நோயின் பரவல் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரசாங்க சுகாதார பிரிவும், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜயசுமனவும் இதனைத் தெரிவித்துள்ளனர்.

வடமத்திய மாகாணத்தின் பல பகுதிகளில் இந்த நோய் தீவிரமாக பரவியுள்ளது. இதன் தொடர்ச்சியாக திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் இந்த நோய் காணப்படுகிறது.

இதற்கு அந்தப் பகுதிகளில் விநியோகிக்கப்படுகின்ற குடிநீர் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்த நிலையில் அங்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் போத்தல்களை பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது

# இம்மாத இறுதியில் உதவித்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், மற்றும் மரணமடைந்த போராளிகளின் குடும்பத்தினருக்கான உதவித் திட்டத்தின் தரவு சேகரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் சேகரிக்கப்பட்ட தரவுகள் அடிப்படையில் உதவிகள் வழங்கும் பொருட்டு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



அமெரிக்கா சென்றுள்ள மீன்பிடித்துறை அமைச்சர் இம்மாத இறுதியில் நாடு திரும்பியவுடன் பயனாளிகளை நேரடியாக சந்தித்து பயனாளிகள் ஒவ்வொருவரினதும் தேவைக்கேற்ப பொருத்தமான உதவித் திட்டங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

# இணுவில் மத்திய கல்லூரிக்கு பழைய மாணவர்கள் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் நாடுகளில் வாழும இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் இக்கல்லூரிக்கென கலாசார மண்டபமொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

90 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த கலாசார மண்டபத்திற்கு கனடா வாழ் புலம்பெயர் மாணவர்கள் 46 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர்.


எதிர்வரும் 29 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ள இம் மண்டபத்துக்காக லண்டனில் வசித்துவரும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் 5 இலட்சம் ரூபாவை வழங்கி உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய, இலங்கை மீனவர் பிரச்சினை அடுத்த சுற்று பேச்சு எப்போது?

## தீர்மானிக்கப்படவில்லை திகதி

(கொழும்பு)

இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.



இரண்டு நாடுகளினதும் மீனவப் பிரதிநிதிகள் கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இறுதியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாக அமைச்சின் செயலாளர் நிமல் ஹெட்டிஆராச்சி கூறியுள்ளார்.

வருடத்தின் குறித்த சில நாட்கள் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்து மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என இதன்போது தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

எவ்வாறாயினும் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே நிராகரித்துள்ளது.

இந்த நிலையில் இரு தரப்பு மீனவர் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இணக்கப்பாடு இதுவரை ஏற்படவில்லை என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த 14 தமிழக மீனவர்கள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது 33 படகுகளும் இலங்கையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

# தமிழக இளைஞன் பொலிஸாரால் கைது

சுற்றுலாவிசாவில் இலங்கை வந்து புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட தமிழக இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற இந்தக் கைதின் போது தமிழ்நாடு கிருஷ்ணகிரியைச் சேர்ந்த முருகானந்தன் கிருஷ்ணகுமார் (வயது-25) என்பவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இச்சட்டவிரோத வியாபாரம் குறித்து விசாரணையினை மேற்கொண்டுள்ள பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (18)

# வடக்கில் மூடப்பட்ட முகாம்கள் எத்தனை?

## விளக்குகிறது இராணுவம்

2015 ஜனவரிக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் எவ்வித இராணுவ முகாம்களும் மூடப்படவில்லை என இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

ஜனவரி மாதத்திற்குப் பின் வடக்கில் 59 இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக அண்மையில் வெளியான தகவலை இராணுவ தலைமையகம் முற்றாக நிராகரித்துள்ளது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின் வடக்கின் நிலைமைகளை கருத்திற்கொண்டு படையினர் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டு வந்துள்ளதாக இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி தேவை ஏற்பட்ட சிறிய முகாம்கள் சில மூடப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு 07 முகாம்களும், 2010ஆம் ஆண்டு 09 முகாம்களும், 2011ஆம் ஆண்டு 04 முகாம்களும், 2013 இல் 17 முகாம்களும், 2014ஆம் ஆண்டு 24 முகாம்களும் மொத்தமாக 59 சிறிய முகாம்களாக மூடப்பட்டதாக் இராணுவத் தலை மையகம் தெரிவித்துள்ளது.

# அதிகளவில் கல்வி விசாமூலமே சட்டவிரோத ஆட்கடத்தல்கள்



## அமைச்சர் அத்துக்கோரல தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி விசா பெற்றுத் தருவதாக கூறி சட்டவிரோத ஆட்கடத்தல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நபர்களிடம் ஏமாற வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாட்டிற்காக பல்வேறு ஊடகங்களை பயன்படுத்துவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்

கல்வி விசா மூலம் சென்று அங்கு பகுதிநேர தொழிலில் ஈடுபடலாம் எனத் தெரிவித்தே இளைஞர், யுவதிகளிடம் அதிக பணம் பெற்றுக் கொண்டு மோசடி இடம்பெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் எழுத்துமூல அனுமதியின்றி வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவது சட்டவிரோத செயல் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு மோசடியில் ஈடுபட்டு வரும் 15 நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அதில் 7 நிறுவனங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# செயற்கை அணியில் பயணிக்கும் மகிந்த

## கூறுகிறார் ரணில்

தம்மை பிரதமர் வேட்பாளராக தெரிவு செய்யக்கோரி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிடம் கோருவது, செயற்கை அலையில் பயணிப்பதை போன்றது என்று பிரதமர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அலை விரைவில் குறைந்து போய் விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் செய்தியாளர் குழு ஒன்றைச் சந்தித்த போதே ரணில் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது ரணில் விக்கிரமசிங்க, அதிகமாக அரசியல் பேசவில்லை. அதற்குப் பதிலாக செய்தியாளர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்கே அதிக நேரத்தை செலவிட்டார

# வித்தியாவின் படுகொலை கண்டித்து தீர்மானம்

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து ஊர்காவற்றுறைப் பிரதேச சபை கண்டனத் தீர்மானமொன்றை கடந்த மாதம் 27 ஆம் திகதி நிறைவேற்றியுள்ளது.

இப்படுகொலைக்கு காரணமானவர்களை விரைந்து தண்டிக்க நடவடிக்கையை வலியுறுத்துவதுடன் சகோதரி வித்தியாவிற்கு சபையின் கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதாக அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபை உறுப்பினரான புவனேஸ்வரனால் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்தை அ.சாள்ஸ் றூன்சன் வழிமொழிந்தார்.

மரணமான வித்தியாவின் ஆத்மாசாந்தி பெற பிரார்த்திப்பதுடன் வித்தியாவின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தவிசாளர் ம.ஜெயகாந்தன் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்



வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றியம் கொழும்பில் நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் கோட்டை மத்திய புகையிரத நிலையத்திற்கு முன்பாக முற்பகல் முன்னெடுக்கப்பட்டது.

தங்களுக்கு வெகுவிரைவில் தொழில்வாய்ப்புகளை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான வேலையில்லா பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் நிதியமைச்சு வரை இவர்கள் பேரணியாகச் சென்றனர்.

நிதியமைச்சு முன்பாக பாதுகாப்பு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததால் வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றியத்தின் 6 பிரதிநிதிகள் மட்டும் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை நிதியமைச்சிற்குச் சென்று கையளித்தனர்.

**(11) கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

62. ஒரு பலகையின் நீளம் 12m 100cm இன்னொரு பலகை 7m 15cm இரண்டு பலகைகளினதும் நீளமென்ன?
..................................................

63. ஒரு கம்பி 2m 40cm இன்னொன்று 2m 45cm இன்னொன்று 2m 40cm ஆயின் முழுக்கம்பியின் நீளம் என்ன?
..................................................

64. 25m 25cm நீளமான சட்டத்திலிருந்து 18m 50cm நீளத்தை வெட்டி எடுத்த பின் மிகுதி நீளம் எவ்வளவு?
..................................................

65. இன்று காலை 7 மணியிலிருந்து இன்று மாலை 7மணி வரை எத்தனை மணித்தியாலங்கள்?
..................................................

66. ஒரு கடகத்தில் 75 மாம்பழங்கள் இருந்தன. அப்படி 12 கடகங்களில் எத்தனை மாம்பழங்கள் இருக்கும்?
..................................................

67. என்னுடைய வயதைப்போல் மூன்று மடங்கு எனது தந்தையின் வயது தந்தையின் வயதிலும் பார்க்க 30 வயது பேரனுக்கு அதிகம் எனவே பேரனின் வயது என்ன? என்னுடைய வயது 15 ஆகும்
..................................................

**(12) இலங்கையில் 'வனவளம்' பாதுகாக்கப்படவேண்டும் என்பது பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதவும்**

68. ..................................................

69. ..................................................

70. ..................................................

71. ..................................................

72. ..................................................

73. ..................................................

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 1. மகாவலி கங்கை பற்றியதாகும்   2. மகாவலி கங்கை   3. அகவும்   4. பொன்
(02) 5. அழகு   6. தேசம்   7. சூரியன்   8. மேற்கு   9. பூ   10. இரத்தினம்
(03) 11. அல்லுலோகம்   12. பணக்காரன்   13. தாமரை   (04) 14. 154ரூபா   15. 400ரூபா
(05) 16. 18.00   17. 288.00   18. 27   19. வெள்ளை   20. 212.00
21. 391.00   22. 48   (06) 23. 4   24. 2   25. 2   26. 2   27. 2
28. சரியான விடையைக் கற்பிக்கவும்   29. 1   30. 2   31. 3   32. 2
33. 1   34. 3   35. 2   36. 3   37. 3   38. 2
39. 4   40. 4   (07) 41. 4   42. 4   43. 3   44. 4
(08) 45. சிங்கம்   46. கீழ்   47. விளாம்பழம்   48. நகரம்   (09) 49. 3   50. 1
(10) 51. 2   52. 1   (11) 53. 4   54. 2   (12) 55. களவு
57. கருணை   58.   (13) 59 - 62 வரை விரும்பிய வசனம்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 4 பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01) கொடுக்கப்பட்டுள்ள பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

வருடா வருடம் ஏப்ரல் மாதம் 14 அல்லது 15ஆம் திகதி மட்டில் சித்திரை புத்தாண்டு பிறக்கிறது. இது தமிழருக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கு புத்தாண்டாக இருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். இரு இனங்களுக் கிடையில் உள்ள பல ஒற்றுமைகளுக்கு இதுவும் ஒரு சான்றாகும். புத்தாண்டு பிறந்ததும் தமிழ்மக்கள் மருத்து நீர் வைத்து நீராடிப் புத்தாடை அணிந்து கோயிலுக்கப் போய்வருவார்கள். பலகாரங்களோடு சேர்ந்த அறுசுவை உணவுகளைப் பரிமாறிக்கொள்வார்கள். எக்கருமங்களைச் செய்தாலும் நல்லநேரம் பார்த்தே செய்வார்கள் முக்கியமாகக் கைவிசேடம் வழங்குதல் சிறந்த நேரத்திலேயே இடம்பெறும் உறவினர் விடுகளுக்கும் நல்ல நாள் பார்த்தே செல்வர் மாணவர்கள் சகபாடிகள் வீடுகளுக்குச் செல்வர்

01. தமிழர் புத்தாண்டு எப்போது பிறக்கும் ? ..................................................

02. 2016 ஆம் ஆண்டு எப்போது பிறக்கும் ? ..................................................

03. ஏப்ரல் 14 அல்லது 15ஆம் திகதியில் பிறக்கும் புத்தாண்டின் சிறம்பம்சம் என்ன?
..................................................

04. சிங்களவர், தமிழர்களுக்கிடையில் உள்ள ஒற்றுமைக்கு வேறு ஒரு சான்று தருக?
..................................................

05. சாதாரண நாட்களில் நீராடுவதற்கும், புத்தாண்டில் நீராடுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன?
..................................................

06. புத்தாண்டில் நல்லநேரம் பார்த்துச் செய்யும் நிகழ்ச்சிகள் இரண்டு தருக?
..................................................

07. 'மருத்துநீர்' பிரித்தெழுதுக? ..................................................

08. "உறவினர்" என்ற சொல்லுக்கு ஒத்தசொல் ஒன்று தருக? ..................................................

09. "செய்வார்கள்" என்ற வினைமுற்று நிகழ்காலமா /எதிர்காலமா? ..................................................

10. "சகபாடிகள்" என்போர் யாவர்? ..................................................

**(02) கீழ்க்காணும் வாக்கியத்தைத் தனித்தனி வினைமுற்றுக்களைக் கொண்ட மூன்று வாக்கியங்களாக எழுதுக**

தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் இலங்கையின் பல பிரதேசங்களில் வாழ்ந்தாலும் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள்

11. ..................................................

12. ..................................................

13. ..................................................

**(03) தரப்படும் வாக்கியங்கள் செய்வினை வாக்கியமா? செயப்பாட்டு வாக்கியமா? எனக்கூறுக**

14. ஆசிரியர்கள் பயிற்றப்பட்டுள்ளார்கள் ..................................................

15. தொழிலாளர்களுக்கு கூலி வழங்கினார் ..................................................

16. வாகனத்திலிருந்து பொருட்கள் இறக்கப்பட்டன ..................................................

17. தருமம் தலைகாக்கும் ..................................................

(04) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக

18. முக்கனிகளும் எவை? ..........

19. அன்னாசி தனிப்பழமா? கூட்டுப்பழமா? ..........

20. வித்துக்கள் முளைத்து வருவதற்கு அவசியமானவை எவை? ..........

21. குருவிச்சைத் தாவரம் எவ்வாறு பரவுகின்றது? ..........

22. சில தாவரங்கள் முட்களைக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? ..........

23. தாவரங்களால் ஏற்படும் மிகச்சிறந்த நன்மை ஒன்று கூறுக? ..........

24. மருந்துக்குப் பயன்படும் மூன்று தாவரங்கள் தருக? ..........

25. பௌத்தர்களால் புனிதமாகப் பேணப்படும் மரம் யாது? ..........

26. இலங்கையின் தேசிய மலர் எது? ..........

27. நீரில் வளரும் தாவரம் ஒன்று தருக? ..........

(05) பாடலை அவதானித்து கேள்விகளுக்கு விடை தருக

சித்திரை ஆனி சீர் புரட்டாதி
உத்தம கார்த்திகை முப்பது நாளே
நத்திய மாசியில் நாலேழாக
வைத்தன வெல்லாம் முப்பத்தொன்றே

28. இப்பாடல் எது பற்றியதாக அமைகின்றது? ..........

29. முப்பது நாட்களை உடைய மாதங்கள் எவை? ..........

30. முப்பத்தொரு நாட்களை உடைய மாதங்கள் எவை? ..........

31. மாசி மாதத்தில் எத்தனை நாட்கள் எனக் கூறப்பட்டுள்ளது? ..........

32. இப்பாடலில் ஒரு முக்கிய விடயம் கூறப்படவில்லை அது எது? ..........

(06) விளம்பரத்தில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

**முதுமையில் இளமை தரும் கபா**

இழந்த இளமையைத் திரும்ப பெற வேண்டுமா, கபா இரசாயனத்தை தவறாமல் உபயோகியுங்கள்

சிறந்த விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. மேற்கு நாட்டில் தயாரிக்கப்பட்டது 26 - 32 வயதுடைய குரங்குக்கே இளமையைத் தந்தது. முதுமையில் இளமை பெற அணுக வேண்டியது

'கபா' ஸ்தாபனம்
வெள்ளவத்தை

33. 'கபா' என்பது என்ன? ..........

34. கபாவின் உபயோகத்தால் ஏற்படும் நன்மை என்ன? ..........

35. கபாவைக் கண்டுபிடித்தது யார்? ..........

36. எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது? ..........

37. கபாவை இலங்கையில் எங்கே பெறலாம்? ..........

38. முதுமையில் இளமையைத் தரும் என்பதற்கு என்ன அத்தாட்சி? ..........

(07) கீழே தரப்படும் வினாக்களுக்கு ஆங்கில எழுத்துக்களை விடையாகத் தருக

A - தோசை B - வடை C - பாயாசம் D - இட்டலி
E - கேக்

39. முட்டை சேர்த்துச் செய்யப்படும்? ..........

40. உழுத்தம்மா சேர்த்துச் செய்யப்படும்? ..........

41. கடலைப்பருப்புக் கொண்டு செய்யப்படும்? ..........

42. சவ்வரிசியில் செய்யப்படுவது? ..........

43. றவ்வை கொண்டு செய்யப்படுவது? ..........

(08) கடைக்குச் சென்ற அம்மா கீழ்க்காணும் பொருட்களை வாங்கிக்கொண்டு வந்தார். அப்பொருட்களின் விலைப்பட்டியலைத் தயாரிக்குக

| | பொருட்கள் | விலை ரூ.சதம் | அளவு kg | மொ.பெறுமதி |
|---|---|---|---|---|
| 44. | மல்லி | 33.00 | 3 | |
| 45. | பருப்பு | 56.00 | 1/2 | |
| 46. | B. வெங்காயம் | 32.00 | 4 | |
| 47. | கோதுமை மா | 26.00 | 5 | |
| 48. | நெத்தலி | 150.00 | 1/4 | |
| 49. | மிளகாய் (செத்தல்) | 95.00 | 1 | |
| 50. | மல்லி | 84.00 | 2 | |
| 51. | | மொத்தம் | | |

52. Aயை விட Bயிடம் 500/= கூடுதலாக உண்டு C யிடம் 6000/= உண்டு A யை விட C யிடம் 500/= கூடுதலாக உண்டு A,B தனித்தனி இருவரும் எவ்வளவு பணம் வைத்திருக்கின்றார்கள்?

..........

53. இலங்கையில் B.B.C செய்தி இரவு 9.45க்கு இடம்பெறும் போது லண்டனில் எத்தனை மணி (இருநாடுகளுக்கு இடையில் 6 மணி நேரம் வித்தியாசம்)

..........

54. அண்மையில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் 112பேர் உயிர் இழந்தார்கள். 266பேர் காயமடைந்தனர். புகையிரதத்தில் பிரயாணம் செய்தவர்கள் 2640பேர் எனின் எதுவித காயங்களுமில்லாது தப்பியோர் எத்தனை பேர்?

..........

(09) தரப்பட்டுள்ள நான்கு சொற்களில் ஒன்று பொருத்தமற்றது அதன் கீழ்க் கீறிடுக

55. தபாற்காரன், சைக்கிள், முத்திரை, கடிதம்

56. கணினி, இணையம், மின்னஞ்சல், தொலைநகல்

57. பென்சில், கோடாரி, பேனா, தாள்

58. எறும்பு, நுளம்பு, இலையான், கொசு

(10) கீழே தரப்பட்டுள்ள தமிழ்ச்சொற்களுக்குரிய சிங்களச்சொற்களை சிங்களத்தில் எழுதுக

59. தபாற்காரன் ..........

60. விழா ..........

61. சிங்களம் ..........



விசேட வினாத்தாள் I தரம் 04 - 2015 கல்விமுரசு

# வன்முறையாளர்களுடன் பல்கலை மாணவன் நின்றது ஏன்?

## நீதிபதி இளஞ்செழியன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி பெட்றோல் குண்டுகள். தடிகம்புகள், கோடரி பிடிகள், பொல்லுகள் சகிதம் கைது செய்யப்பட்ட இளைஞர்களுடன் யாழ்பல்கலைக்கழக மாணவன் ஒருவர், இருந்தது ஏன் என, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் இவ்வாறான பத்து இளைஞர்களை பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததையடுத்து, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் சதீஸ்கரன் உத்தரவிட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்த 10 பேரில் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவன் என தெரிவித்து, அவர் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பதனால், அவரை பிணையில் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவைப் பரிசீலனை செய்தபோதே நீதிபதி இளஞ்செழியன் வீதியில் ஆயுத மேந்தியிருந்த குழுவினருடன் பல்கலைக்கழக மாணவனுக்கு என்ன வேலை என வினவியிருந்தார்.

பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ள பத்துப் பேரும், பெற்றோல் குண்டுகள், மற்றம் கோடரி பிடிகள் பொல்லுகள் சகிதம் அபாயகரமான ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தால், அந்த மாணவனின் பிணை மனுவை உடனடியாகப் பரிசீலனை செய்து பிணை வழங்க முடியாது என தெரிவித்து, நீதிபதி விசாரணையை பிற்போட்டுள்ளார்.

இந்த மாணவன் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பாடுகள் குறித்து, மல்லாகம் நீதிமன்றத்தில் உரிய கட்டளையைப் பெற்றுச் செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ள நீதிபதி இளஞ்செழியன், பிணை மனு மீதான விசாரணையை, ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

# றம்ழான் சிந்தனை



**இறை நம்பிக்கையாளர்களே!**

**உங்களுக்கு முன்னிருந்தோர் மீது நோன்பு கடமையாக்கப் பட்டுள்ளது போல் உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இறையச்சம் உடையவராகுங்கள்.**

**(திருக்குர் ஆன் 02.183)**

**ஸஹர் முடிவு : அதிகாலை 4.23**

**நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.34**

# ஆலயத்தில் திருட்டு

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர வைரவர் கோவிலில் கடந்த திங்கட்கிழமை திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதான மூலஸ்தானத்தில் உள்ள நரசிங்கர் விக்கிரகம் அகற்றப்பட்டு அதன் அடியிலிருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதுடன் காரியாலயமும் உடைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டுள்ள நிலையில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார், நாளை வருடாந்த பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இந் நிலையில் இவ் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வவுனியா கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா பிரதேசசெயலக பிரிவில் தோணிக்கல். கூமாங்குளம் கந்தபுரம் ஆசிகுளம், சாஸ்திரிக்குளாங்குளம், சமளங்குளம், மகாறம்பைகுளம், ஈச்சங்குளம், மரைக்காரம்பளை ராஜேந்திரன் குளம். ஆகியகிராம சேவையாளர் பிரிவுகளிலும் வெங்கலசெட்டிகுள பிரதேச செயலக பிரிவில் ஆண்டியபுளியங்குளம் கிராம சேவையாளர் பிரிவிலும் கிராமங்களின் எண்ணிக்கையும் அங்குள்ள மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுவதனால் அதற்கேற்ற வகையில் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்து அக்கிராம மக்களின் வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டும் என வட மாகாண சபை உறுப்பினர் எம்பி.நடராஜினால் வட மாகாண சபையில் முன்மொழிவு செய்யப்பட்டது.

இதற்கிணங்க தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவில் இரண்டு கிராமங்களும் 3983 குடும்பங்களும், 13934 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். மகாறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் நான்கு கிராமங்களும் 2390 குடும்பங்களும், 8027 அங்கத்தவர்களும் காணப்படுகின்றனர்.

கூமாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 1583 குடும்பங்களும் 6833 அங்கத்தவர்களும் உள்ளனர். ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் பதின்மூன்று கிராமங்களும்1584 குடும்பங்களும் 5732 அங்கத்தவர்களும், காணப்படுகின்றனர்.

ஈச்சங்குளத்தில் கிராம அலுவ்லர் பிரிவில் எட்டு கிராமங்களும் 1433 குடும்பங்களும் 4716 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். மரைக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவில் ஐந்து கிராமங்களும்1236 குடும்பங்களும் 4369 அங்கத்தவரும் காணப்படுகின்றனர்.

சமணங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஐந்து கிராமங்களும்1093 குடும்பங்களும் 3730 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் நான்கு கிராமங்களும்1085 குடும்பங்களும் 3732 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். ராஜேந்திரன்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒன்பது கிராமங்களும்708 குடும்பங்களும் 2749 அங்கத்தவர்களும் காணப்படுகின்றனர். ஆண்டியா புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஆறு கிராமங்களும்1168 குடும்பங்களும் 4353 அங்கத்தவர்களும் காணப்படுகின்றனர்.

மேலும் அவர் கூறியதாவது இவ்வாறு கிராம சேவையாளர் பிரிவில் கிராமங்களின். எண்ணிக்கையும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படும் போது கிராம சேவகரால் மக்களுக்கு வழங்கப்படும் சேவையும் கிராம சேவையாளரிடமிருந்து மக்கள் பெற்றுக்கொள்ளும் சேவையும் கேள்விக்குறியாகிறது என குறிப்பிட்டுள்ளார்.

# தேனீர்சாலை தீயிட்டு எரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை செம்பன்மோட்டையில் (நந்திக்கடலோரத்தில்) உள்ள தேனீர்ச்சாலை கடந்த திங்கட்கிழமை இரவு இனந தெரியாதோரினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேனீர்சாலையானது அரைவாசிப்பகுதி கிடுகினாலும் மற்றைய பகுதி தகரத்தினாலும் கொண்டதாகும்

நந்திக்கடலில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் தாங்கள் பிடிக்கும் இறால் மற்றும் மீன்களை குறித்த தேனீர்ச்சாலை அமைந்திருக்கும் இடத்தில் கொண்டு வந்து வியாபாரிகளிடம் விற்பனை செய்வதுடன் குறித்த தேனீர்ச்சாலையில் காலை மற்றும் மதிய உணவுகள், தேனீர், சிற்றுண்டிகளை உண்பது வழக்கமாகும்.

வழமைபோல கடந்த திங்கட்கிழமையும் தேனீர்ச்சாலை திறந்திருந்ததுடன், பின்னர் மாலை மூடப்பட்டுள்ளது. இதனையடுத்து இரவு வேளையில் இனந்தெரியாதவர்கள் அதனை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.



பின்னர் இச்சம்பவம் பற்றி முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்திற்கு சென்று பொலிஸார் விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இதேவேளை கடந்த சில மாதங் களுக்கு முன்னர் இரண்டு வள்ளங்கள் இனந்தெரியாதவர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(165)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ள அறிவிப்பு

புதிதாக வாகனப்பதிவு செய்து இலக்கத் தக டுகள் பெற்றுக் கொள்ளாதவர்களின் வாகன இலக்கத்தகடுகள் யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் உள்ளன.

இதனை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் வேலை நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை யாழ்.செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இதில் பின்வரும் இலக்கத்தகடுகள் தற்போது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என யாழ்மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

HK 8109,KQ 5025,UI 4073,HM 9665,KR 7443,UM 7301,HN 5140, KS 0307, UN 1640, HO 9429, KW 5675, UW 0885, HP 7040, LA 0297, VO 1420, HR 1521, LE 4722, VR 7043, HR 8960, LH 9931, VT 0772, HS 0083, MO 8275, VT 6125, HS 8028, NA 1916, VW 5967, HT 7467, PD 6766, WB 3632, HU 2355, PE 7908, WC 9520, HU 5232, PI 2727, WG 3225, HW 5182, PQ 2412, WV 7722, HW 9406, PS 2541, WZ 0310, HZ 9056, PU 0893, XS 8941, JB 8857, PU 4197, XV 2512, JD 6566, PU 4475, YA 9450, JD 6688, PW 1464, YC 4337

(இ)

# மாணவர்கள் கௌரவிப்பு


(சுன்னாகம்)

சுன்னாகம் கொமர்ஷல் வங்கியினால் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை சுன்னாகம் கொமர்ஷல் வங்கி மண்டபத்தில் வங்கி முகாமையாளர் திருமதி தபோதினி கஜரூபன் தலைமையில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் றோஜ் நிக்ஷன் கலந்து சிறப்பித்தார்கள்.

# அமெரிக்க தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு– 9 பேர் பலி



அமெரிக்காவின் தென்கரோலினா மாநிலத்தின் சார்லஸ்டன் (Charleston) பகுதியிலுள்ள கறுப்பினத்தவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தேவாலயம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒன்பது பேர் பலியாகியுள்ளனர்.

இமானுவேல் ஆபிரிக்க மெதடிஸ்ட் எபிஸ்கோபல் தேவாலயத்தில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

தேவாலயத்திற்குள் எட்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும் சிறிது நேரத்தின் பின்னர் மற்றுமொருவர் பலியானதாகவும் நகர தலைமைப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் வெறுப்புணர்வால் மேற்கொள்ளப்பட்ட ஒன்றென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவாலயத்தின் ஆயரும் சிவில் செயற்பாட்டாளர் ஒருவரும் கொல்லப்பட்டவர்களில் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் 20 வயதான வெள்ளையின இளைஞர் ஒருவரை தேடிவருவதாக சார்லஸ்டன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளதாகவும் தேவாலயத்தில் சந்திப்பொன்று இடம்பெற்ற நேரத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இமானுவேல் ஆபிரிக்க மெதடிஸ்ட் எபிஸ்கோபல் தேவாலயம் அமெரிக்காவிலுள்ள மிகவும் பழமையான ஒரு தேவாலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மோடியின் முயற்சிக்கு பலன்

# சர்வதேச யோகா தினத்தில் இருநூறு கோடி மக்கள் பயிற்சி




(நியூயோர்க்)

பிரதமர் நரேந்திர மோடியின் பெருமுயற்சியின் பலனாக முதலாவது சர்வதேச யோகா தினத்தன்று உலகம் முழுவதும் சுமார் இருநூறு கோடி மக்கள் யோகாசன பயிற்சியில் ஈடுபடுவார்கள் என ஐக்கிய நாடுகள் சபை தூதர் மதிப்பீடு செய்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் பேசும் போது, யோகாவின் பெருமைகள் மற்றும் பயன்பற்றி குறிப்பிட்டு, சர்வதேச அளவில் யோகா தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் யூன் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை கடந்த டிசம்பர் மாதம் அறிவித்தது.

அந்த அறிவிப்பின்படி, எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உலகம் முழுவதும் முதல் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்தின் சார்பில் ஐ.நா.சபை பொதுச்செயலாளர் பான் கி மூன், ஐ.நா. பொதுச்சபைத் தலைவர் சாம் குட்டேசா உள்ளிட்டோர் முன்னிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் மாபெரும யோகாசன நிகழ்ச்சி நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் குண்டு வெடிப்பு வேடிக்கை பார்த்த மக்கள் சாவு



நைஜீரியாவில் போகோ ஹரம் தீவிரவாதிகள் முகாமில் குண்டு வெடித்ததில் 63 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரிய நாட்டில் இஸ்லாமிய ஆட்சியை உருவாக்குவதற்காக பல்வேறு நாசவேலைகளில் போகோஹரம் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடகிழக்கு நைஜீரியாவிலுள்ள மான்குனோ நகரில், போகோஹரம் தீவிரவாதிகள் முகாமை அந்நாட்டு இராணுவத்தினர் கண்டுபிடித்தனர்.

அந்த முகாம் வாசலில் கிடந்த ஒரு சாக்குமூட்டையை அப்புறப்படுத்த முயன்றபோது, அதிலிருந்த வெடி குண்டுகள் வெடித்தன.

இதில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அப்பாவி பொது மக்கள் 63 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

நைஜீரியாவின் புதிய அதிபராக சமீபத்தில் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்து ஹம்மது புஹாரி போகோ ஹரம் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையை விரைவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

## உலகச் செய்திகள்

# அமெரிக்காவிடம் பின்லேடனை பாகிஸ்தானே ஒப்படைத்தது

## அம்பலமாகும் புதிய தகவல்



சுட்டுக் கொல்வதற்கு முன்பு பின்லேடனை பாகிஸ்தான் உளவுத் துறையே அமெரிக்காவிடம் ஒப்படைத்தது என புதிய தகவல் அம்பலமாகியுள்ளது.

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த அல் கொய்தா தலைவர் பின்லேடனை கடந்த 2011ஆம் ஆண்டு அமெரிக்க கொமாண்டோ படையினர் சுட்டுக் கொன்றனர். அங்குள்ள 3 மாடிக் கட்டடத்தில் நீண்ட நாட்களாக பின்லேடன் பதுங்கி இருந்ததாகவும், இந்த தகவல் தெரிந்து அமெரிக்க கொமாண்டோ படையினர் அந்த இடத்தை சுற்றி வளைத்து சுட்டுக் கொன்றதாகவும் கூறப்பட்டது.

ஆனால் இதில் பல் வேறு சர்ச்சைகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன.

இப்போது அமெரிக்காவைச் சேர்ந்த புலனாய்வு பத்திரிகையாளர் செய்மார் ஹரஷ் இது சம்பந்தமாக ஒரு கட்டுரை எழுதி உள்ளார்.

அதில் பின்லேடனை அமெரிக்க கொமாண்டோ படையினர் திடீரென கண்டுபிடித்து கொல்லவில்லை. பின்லேடன் கொல்லப்படுவதற்கு முன்பு 6 ஆண்டுகளாக பாகிஸ்தானில் ஐ.எஸ். உளவுப்படையின் கட்டுப்பாட்டில் இருந்தான். அவனை அவர்கள் அபோதாபாத்தில் சிறை வைத்திருந்தனர்.

கொல்லப்படுவதற்கு முன்பு பின்லேடனை பாகிஸ்தான் உளவுப்படையினரே அமெரிக்காவிடம் ஒப்படைத்தனர். அதன்பிறகு பின்லேடனை அமெரிக்கப் படைகள் சுட்டுக்கொன்றன. அவரது உடலை சல்லடையாக்கி பின்னர் துண்டு துண்டாக வெட்டினார்கள். அதன் சதைப் பகுதியை பல்வேறு இடங்களில் வீசி எறிந்தார்கள்.

அதன் ஒரு பகுதியை இந்துகுஸ் மலையில் வீசினார்கள். பின்லேடனின் உடலை கடலில் அடக்கம் செய்ததாக கூறப்பட்டது பொய்யான தகவல்.

பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதற்காக பாகிஸ்தான் உளவுப் படையை சேர்ந்தவர்கள் 150 கோடி ரூபாய் பரிசுப் பணம் பெற்றிருக்கிறார்கள.

இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

இந்தத் தகவல்களை பாகிஸ்தான் உளவு நிறுவனம் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலரிடம் இருந்து பெற்றதாக அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஈராக் போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய ஐ.எஸ்.

ஈராக் நாட்டின் போர் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தி விட்டதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் அமைப்பு அறிவித்துள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கின் பல பகுதிகளை கைப்பற்றி தனிநாடு அமைத்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தங்கள் எல்லையை விரிவுபடுத்தி வருகிறார்கள். இந்நிலையில் ஐ.எஸ். அமைப்பின் டுவிட்டர் பக்கத்தில் ஈராக் நாட்டிற்கு சொந்தமான போர் விமானத்தை ரமாடி நகரம் அருகே சூட்டு வீழ்த்திவிட்டதாக அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் ஐ.எஸ். தீவிரவாதிகள் அமைப்புக்கு எதிராக போராடி வரும் குழுவைச் சேர்ந்த ஒருவர் விமானம் ஒன்று எரிந்தபடி கீழே விழுவதை பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்

# வீட்டில் காய்ச்சிய ஜின்னை அருந்திய 70 பேர் உயிரிழப்பு

## நைஜீரியாவில் பரிதாபம்

(லோகோஸ்)

எண்ணெய் வளமிக்க நைஜீரியாவின் தெற்குப் பகுதியில் வீட்டில் காய்ச்சப்பட்ட ஜினனைக் குடித்ததால் 70 பேர் பலியாகியுள்ளதாக மூத்த சுகாதாரத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரபியா எனப்படும் பனை மரங்களிலிருந்து வடிக்கப்படும் சாற்றின் மூலமாக உருவாக்கப்படும் ஒகோகொரோ என்ற மதுபானம் நைஜீரியாவில் காய்ச்சப்படுவது வழக்கமானதும், அங்குள்ளவர்களிடம் பிரபலமானதும் ஆகும். இதில் 30 முதல் 60 சதவீதம் வரை அல்கஹோல் இருக்கும்.

அங்குள்ள ரிவர் ஸ்டேட் என்ற இடத்தில் இது போல் 5 இடங்களில் காய்ச்சப்பட்ட ஜின்னைக் குடித்து பலியானவர்களின் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்திருப்பதாக மூத்த சுகாதாரத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத குடியேற்றம்; இலங்கையில் தேசிய கொள்கை

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் இலங்கையில் ஒன்றிணைந்த தேசிய கொள்கை வகுக்கப்படுமென ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.

ஜெனிவாவில் ஐ.நா. சபையின் 29 ஆவது அமர்வு யூன் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமானது. இதில் இலங்கை சார்பில் ஆரம்ப உரையை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குடியேற்றக்காரர்களை ஆட்கடத்தல் காரர்களினால் பாதிப்புக்குள்ளானவர்களாக கருதும் இலங்கை அனைத்து சட்டவிரோத குடியேற்றம், ஆட்கடத்தல், கடத்தல் ஆகியவற்றுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

சட்டவிரோத குடியேற்றம் தொடர்பில் இலங்கை விழிப்புணர்வுடனேயே செயற்பட்டு வருகின்ற போதிலும் அதனுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் குறித்து சற்று வித்தியாசமாக கையாளும் நோக்கில் ஒன்றிணைந்த தேசிய கொள்கையொன்றை நிறுவ தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குடியேற்றவாசிகளுக்கான நலன்புரி செயற்பாடுகளுக்கு மேலதிக சக்தி மற்றும் வளங்களை பெற்றுத் தருவதாக அமையுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஆயுர்வேத மருத்துவ நிலையம் குருநகரில் திறந்துவைப்பு

சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினரால் யாழ். குருநகர் பகுதியில் ஆயுர்வேத மருத்துவ நிலையம் திறந்து வைக்கப்பட்டதுடன், வலுவிழந்த நபர்களுக்கான சிகிச்சை முறையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை இலங்கைக்கான இந்தியத் துணைத தூதுவர் அ.நடராஜா மற்றும் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கணேஷ் வேலாயுதம் ஆகியோர் ஆயுர்வேத வைத்திய நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

வைத்திய பரிசோதனைக்கான நிதி வசதிகள் மற்றும் குணப்படுத்தக்கூடிய வசதிக்கான நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றார்கள்.

அதே சமயம், குருநகர் சன சமூக நிலையத்திற்க 200 கதிரைகளும் வழங்கி வைக்கப்பட்டன. அதேநேரம் அதே பகுதியில் சன சமூக நிலையம் ஒன்றினையும் கட்டுவதற்கான கட்டுமானப்பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த நிகழ்வில், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (25)

# இந்தியப் பிரஜை கைது

(யாழ்ப்பாணம்)

சுற்றுலா விசாவில் வந்து மந்திகை பகுதியில் தங்கியிருந்த இந்தியாவின் திருப்பூர் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செந்தில்குமார் (வயது - 32) என்பவர் பொலிஸார் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கைதுசெய்யப்பட்டபோது இவரிடம் 239 நிஜாம் பாக்குகள் இருந்ததாகவும், பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் பொலிஸார் இவரை ஆஜர்படுத்தியபோது 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (18)

# புதிய நிர்வாகம் தெரிவு

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபையின் நிாவாகத் தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை சபையின் தலைவி திருமதி ப.கிருபாசினி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நடப்பாண்டுக்காக இடம்பெற்ற நிர்வாகத் தெரிவில் தலைவராக பாலகுமார் அனித்தா (கண்ணகைபுரம்), உப தலைவராக ராஜ்குமார் நிசாந்தினி (வன்னேரிக்குளம்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன், வங்கி வலயத்திற்குட்பட்ட வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கோணாவில், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து 13 புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (69)

# சுதந்திரக் கட்சியில் போட்டியிட மகிந்தவுக்கு இடம் இல்லை

## அமைச்சர் ராஜித சேனாரட்ன

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவதற்கு இடமளிக்கப்படாது எனவும், இது தொடர்பாக ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டிலேயே இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மகிந்த முதலில் பிரதமர் பதவி கேட்டார் அது கொடுக்கவில்லை. அடுத்து தேசிய பட்டியலில் இடம் கேட்டார் அதுவும் கொடுக்கவில்லை. இப்போது வேட்பாளர் பட்டியலில் இடம் கேட்கின்றார் அதுவும் கிடைக்காது. தோற்றவருக்கு இனி எதற்கு பதவி. எமக்கு கட்சியை விட நாடே முக்கியம். நாடு பாதுகாப்பாக இருந்தால் கட்சி பாதுகாப்பாக இருக்கும்.

நாம் நெல்சன் மண்டேலா பாதையிலேயே பயணிக்க விரும்புகின்றோம். முகாபேயின் பாதையில் அல்ல. இதன்படி ஒரு போதும் மகிந்தவுக்கு போட்டியிட இடம் கிடைக்காது. இது தொடர்பாக ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றார் என ராஜித தெரிவித்துள்ளார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## யாழில்...

கண்காணிப்புடன் தேவையற்ற முறையில் பாடசாலைகளுக்கு அண்மையில் நடமாடுபவர்கள் மற்றும் சந்தேகத்திற்கு உரியவர்கள் மீதும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார்கள் எனவும் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களின் முரண்பாடு கத்திக்குத்தில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் இரண்டு மாணவர்களுக்கு இடையே எழுந்த முரண்பாடு கத்திக்குத்தில் முடிவுற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் க.பொ.த. சாதாரண தர மாணவர் ஒருவர் முகத்தில் காயமடைந்தார். நேற்று முன்தினம் பாடசாலையில் அதிபர், உப அதிபர் இருவரும் விடுமுறையில் இருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவரே கத்தியால் குத்தியுள்ளார். இது குறித்து நேற்று பாடசாலை அதிபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் பாடசாலைக்கு சென்று குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## மோட்டார்...

மரணமானார். மற்றைய இருவரில் வேதநாயகன் சிவரூபன் (வயது - 20) என்பவர் கால் முறிவடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றைய இளைஞரான ஆனந்தராஜா அனோஜன் (வயது - 15) ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

## வர்த்தமானி...

இரத்துச் செய்யுமாறு சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் கொழும்பில் நேற்று மாலை கூடி ஆராய்ந்தது.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், குறித்த வர்த்தமானி அறிவித்தலை உடன் இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக எதிர்ப்பதற்கு தீர்மானித்திருக்கின்றோம். இந்தத் திருத்தச் சட்டமூலத்தில் பூரண ஒத்துழைப்பின்றி வர்த்தமானியில் பிரசுரித்திருப்பதன் மூலம் எங்களுடைய அடிப்படை ஜனநாயக உரிமைகளை பறித்திருப்பதை கண்டிப்பதோடு, உடனடியாக அந்த வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பட வேண்டும்.

இதனடிப்படையில் இந்த 20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு எதிரான போராட்டத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமரோடு பேசிய பின்னர் நாட்டு மக்களுக்கு மத்தியில் முன்னெடுத்துச் செல்வதற்காக தயாராக இருக்கின்றோம்.

இந்த திருத்தச் சட்டமூலத்தில் சில திருத்தங்கள் எங்களால் முன்வைக்கப்பட்டிருந்தன. இரட்டை வாக்கு முறை உட்பட பலவிதமான திருத்தங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளன.

எந்த அடிப்படையும் இல்லாத ஒருதலைப்பட்சமாக ஒரு தீர்மானத்திற்கு இந்த நாட்டிலே ஒருசில கட்சிகளை மட்டும் பாதுகாப்பதற்காக இந்த தேர்தல் முறைமை மாற்றம் அமைகின்றது என்றார். இந்த ஆராய்வுக் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, மலைய மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

## 30 பேருக்கு...

கடமைக்கு இடையூறு விளைவித்தமை, நீதிமன்றினை தாக்கியமை, பொதுச்சொத்துக்களை சேதம் விளைவித்தமை போன்ற பல குற்றச்சாட்டுக்களின் பேரில் 139 பேர் முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீது 3 பிரிவுகளாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் இரு பிரிவுகளைச் சேர்ந்த 30 பேர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இவர்கள் அனைவரும் நிபந்தனையுடனான 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (இ)

## 'மாவா"...

செய்யப்பட்டதையடுத்து இவ்வாறு விற்பனை செய்வோர் கைதுசெய்யப்படவேண்டும் என்ற உத்தரவுக்கமைய யாழ். பொலிஸார் ஆறுகால்மடத்திற்கு அண்மித்த பகுதியிலுள்ள பாக்கு விற்கும் கடையிலுள்ளவர்கள் 2 பேரை கைதுசெய்ததுடன், அவர்கள் பயன்படுத்திய சட்டவிரோத பொருட்களும், மூலப்பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. (இ,25)

## மாவைக்கு...

பட்டுள்ளது. மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்றிட்டங்களைக் கொடுத்தார்களா? வாகனங்களைப் பெற்றார்களா? என்பதை அந்தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையே கேட்கவேண்டும் என சுரேஷ் தெரிவித்திருந்தார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன், வெளிப்படையாக என்னென்ன தேவைகளுக்காக, எவ்வளவு நிதி ஒதுக்கீடு அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனைத் தெரிவித்துள்ளார். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீட்டினை பெற்றுள்ளார்கள் என்ற எனது குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அவரது இந்தக் கருத்துக்கள் அமைந்துள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளரது இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் மூலமான ஆதாரங்களுக்கு மேலதிகமான ஆதாரங்கள் எதனையும் என்னிடம் பெறவேண்டிய தேவை இருக்காது எனக் கருதுகின்றேன்.

வடமாகர்ண சபையைப் புறக்கணித்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டதென்பதையும் பணம் தென்னிலங்கையில் இருந்தே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றேன்.

செயற்றிட்டங்களை உத்தியோக பூர்வமாக நடைமுறைப்படுத்துவது வடமாகாணசபை அலுவலர்கள். வடமாகாணசபைக்கு இவற்றுக்கான பணம் ஒதுக்கப்பட்டு வருகின்றது. வடமாகாண சபையுடன் கலந்துரையாடல் இன்றி இப்பேர்ப்பட்ட செயற்றிட்டங்களில் இறங்குவது ஒரே விடயம் சம்பந்தமாக இரட்டையான நடைமுறைப்படுத்தல் நடைபெற இடமளிக்கும் என்பதை உணர்ந்திருப்பீர்கள்.

வடமாகாண சபை மூலமாக நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் அந்நிதியம் வடமாகாண சபை மூலமாகவே ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட நிதி ஒதுக்கீடு பற்றி அந்தந்தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்க முன்வரவேண்டும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தும், ஏனையோர் அது பற்றி இன்னமும் வெளிப்படையாக கருத்து தெரிவிக்காதது கவலையளிக்கிறது.

மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், சுரேஷ் பிரேமச்சந்திரனைப் போல் வெளிப்படையாக தமது நிலைப்பாட்டை மக்களுக்கு தெரிவிக்க முன்வரவேண்டும் என விரும்புகின்றேன் என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

# மீள்குடியேறிய அனைவருக்கும் இலவச மின் இணைப்பை வழங்குங்கள்

## மின்சக்தி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர்களிடம் சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக இலவச மின் இணைப்பை இதுவரை பெற்றுக் கொள்ளாத மீள் குடியேறிய அனைவருக்கும் இலவச மின் இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திர குமார் மின்சக்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோரிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

கடிதம் மூலமும் தொலைபேசி ஊடாகவும் மேற்படி அமைச்சர்களை தொடர்பு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இவ் அவசர கோரிக்கையை விடுத்துள்ளார்.



மீள் குடியமர்ந்த மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக வழங்கப்பட்டு வந்த இலவச மின் இணைப்புக்கள் இடைநிறுத்தப்பட்டதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளதென மக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி அமைச்சுகளிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

வடக்கில் இதுவரை எழுபதாயிரம் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது ஆயினும் தற்போது நடைமுறையில் இருக்கும் வடக்கின் வசந்தம் திட்டம் நிறைவுறும் போது இன்னும் இருபதாயிரம் வரையானோர் இணைப்புக்களை பெறவேண்டியவர்களாக இருப்பார்கள் எனவே இவர்களுக்கும் இவ் இலவச மின் இணைப்பை பெறும் வாய்ப்பை வழங்க வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் மின் இணைப்புக்களை வழங்கும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்ட போதும் அவ்வப்போது ஏற்பட்ட மின் இணைப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்களின் தட்டுப்பாடு காரணமாகவே குறித்த இருபதாயிரம் வரையானோர் இணைப்புக்களை பெறமுடியாத நிலை ஏற்பட்டது என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அமைச்சர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (29)

## விசேட பொதுக்கூட்டம்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க (லிப்கோ) விசேட பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதன் தலைவர் மு. பரமேஸ்வரன் தலைமையில் சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இப் பொதுக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு. கணேசு ஆகியோரும், கௌரவ விருந்தினராக பிராந்திய திட்ட இணைப்பாளர் செ. ஞானகணேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதுடன் பால் உற்பத்தித் தொழிற்சாலையின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது. (இ)

## 3 பொலிஸாருக்கு 8 வருட கடூழியசிறை

(கொழும்பு)

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் பணிப்பாளரான பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் சில்வா மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு பாணந்துறை மேல் நீதிமன்றம் 8 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

1991 ஆம் ஆண்டு இங்கிரிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த போது 16 வயதான பாடசாலை மாணவனை கொலை செய்து காணாமற்போகச் செய்தமை சம்பந்தமாக நடந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி எம். இஸட் ரசீம் இந்த தீர்ப்பை வழங்கியதுடன் சிறை தண்டனைக்கு மேலதிகமாக மூன்று குற்றவாளிகளும் தலா 25 ஆயிரம் ரூபா அபராதத்தை செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

# அரச - தனியார் பேருந்து சாரதிகள் கிளிநொச்சியில் மீண்டும் முறுகல்

(கிளிநொச்சி)

அரச தனியார் பேருந்து சாரதி, நடத்துனர்களிற்கிடையில் நேற்று மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி 155ஆம் கட்டை ஏ-9 வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் முறுகல் நிலை ஏற்பட்டது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு பேருந்துகளிற்கும் இடையில் ஏற்பட்ட போட்டி காரணமாக குறித்த பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டது. தனியார் பேருந்தினை முந்திச் செல்ல முற்பட்ட அரச பேருந்துக்கும், தனியார் பேருந்துக்கும் சிறிதளவான சேதம் ஏற்பட இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை முற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இரு பேருந்துகளிலும் பயணித்த பயணிகள் நீண்ட நேரம் அசௌகரியங்களை அனுபவித்ததுடன், மற்றுமொரு பேருநதில் தமது பயணத்தினை தொடர்ந் தனர். மக்களிற்கு ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக இரு பேருந்துகளிலும் மக்கள் அதிருப்தி வெளியிட்டனர். இவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாக பயணிக்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.

நீண்ட காலமாக வடமாகாணத்தில் அரச தனியார் பேருந்துகளிற்கிடையில் முறுகல் நிலை காணப்படுவது தொடர்பில் செய்திகள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. இந்நிலையில் கடந்த மாதம் 8ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற அரச தனியார் பேருந்து உரிமையாளர்களிற்கிடையிலான கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவித்த வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் வன்னியில் அவ்வப்போது இரண்டு தரப்புகளும் அடிக்கடி பயணிகளை கருத்தில் எடுக்காது பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்வது பலராலும் கண்டிக்கப்பட்டு வருவதோடு இது தீர்வின்றி தொடர்வதாகவும் குறிப்பிடுகின்றனர். (29).

# நலிந்த நாடுகளில் 34ஆவது இடத்தில் இலங்கை

உலகின் மிக நலிந்த நாடுகளின் பட்டியலை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அமைதிக்கான நிதியம் (The Fund For Peace (FFP) வெளியிட்டுள்ளது.

178 நாடுகளிடையே நடத்தப்பட்ட அந்த ஆய்வில் 34 ஆவது இடத்தை பிடித்துள்ள இலங்கை அவதானத்துடன் இருக்கவேண்டிய நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிக நலிவுற்ற நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் தென் சூடான் பட்டியலிடப்பட்டுள்ளது. இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களை முறையே சோமாலியா, மத்திய ஆபிரிக்க குடியரசு, சூடான் ஆகிய நாடுகள் பெற்றுள்ளன. மிக உயர்ந்த நிலைபேண் தன்மை கொண்ட நாடாக பின்லாந்து தெரிவாகியுள்ளது.

அடுத்து சுவீடன், நோர்வே, டென்மார்க், லக்ஸம்பேர்க், சுவிஸ்ஸர்லாண்ட் போன்ற 14 நாடுகள் நிலைத்திருக்கும் நாடுகளாக பட்டியலிடப்பட்டுள்ளன. வருடம் தோறும் இந்த ஆய்வைச் செய்துவரும் இந்த அமைப்பு அந்தந்த நாடுகளில் பல்வேறுபட்ட ஆய்வறிக்கைகள், சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தரப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

# குலுங்கியது விமானம்; 5 பணியாளர்கள் காயம்

(கொழும்பு)

பாரிசில் இருந்து கொழும்பு வந்து கொண்டிருந்த சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம், காற்றழுத்த மாறுபாட்டினால் குலுங்கியதால், விமானப் பணியாளர்கள் ஐந்து பேர் காயமடைந்தனர்.

சிறிலங்கன் விமான சேவையின் யு எல் -564 விமானம் 193 பயணிகள் மற்றும் 16 பணியாளர்களுடன் கட்டுநாயக்க நோக்கி நேற்று அதிகாலை வந்து கொண்டிருந்த போதே இந்தப் பாதிப்பைச் சந்தித்தது.

இதனால், விமானப் பணியாளர்கள் 5 பேர் காயமடைந்த போதிலும், பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

நேற்று அதிகாலை 5.21 மணியளவில் இந்த விமானம் பாதுகாப்பாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

உடனடியாக காயமுற்ற 5 விமானப் பணியாளர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மருத்துவ சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ள போதிலும் ஏனையொருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# கிராமிய வீதிகள் அபிவிருத்தி தேர்தல் தொகுதிகளுக்கு 300 இலட்சம்

கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு தேர்தல் தொகுதிக்கு தலா 300 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்படடுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதி அமைப்பு பணிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற மாவட்ட செயலாளர்களுடனான சந்திப்பின்போது பிரதமர் தெரிவிததார்.

தடைப்பட்டுள்ள அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு மாவட்ட செயலாளர்கள் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.



உரிய வழிமுறையின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்பட்டுள்ளமை தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது, கிராமிய வீதி வேலைத் திட்டங்களை முடிவிற்குக் கொண்டு வரவே எண்ணியுள்ளதாகவும் கூடுதலான நிதியை கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செலவிட வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

தேர்தலின் பின்னர் அபிவிருத்திகளைப் பாரியளவில் முன்னெடுக்கவுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

# கடல் நீரை குடிநீராக பயன்படுத்துதல் பொருத்தமானதா?

### யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண குடாநாட்டின் நீர்வளத்தைப் பேணுதலும், பாதுகாத்தலும் எனும் தலைப்பில் தொடர்உரையாடல் இடம்பெற்று வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு, இல.121, 2ஆம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் பொறியியலாளர் எம்.சூரியசேகரம் யாழ்ப்பாண குடாநாட்டுக் குடிநீர்த்தேவைக்கு கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் பொருத்தப்பாடும் அது எதிர் நோக்கும் சவால்களும எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

சிந்தனைக்கூடத்தின் இயக்குனர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இவ் உரையாடலைத் தொடர்ந்து வெளிப்படைத் தன்மையுள்ள கலந்துரையாடல இடம்பெறும். ஆர்வலர்கள் வருகை தந்துபயன் பெறும்படி ஏற்பட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.